பாரத மணி

ஆசிரியர்
கே. எஸ். வெங்கடமணி

சுபானு ௵ ஆனி மீ

விலை அணு 4

JUNE 1943



நீதிபதி எம். பதஞ்சலி சாஸ்திரியார்.

குழந்தைகளுக்கு ஆரோக்யம் அளிக்கிறது

எதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம்பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினால் ஏற்பட்ட தாங்கொணாத வலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ. டி. எல். உடனடியானசிகித்ஸை செய்வதோடு, மேற்கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களையும் வாராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டிலை வைத்திருங்கள்.

கிரைப் சிரப்

கவர்மெண்டு
இண்டஸ்டிரியல் & டெஸ்டிங்
லேபரடரி, மல்லேசுவரம், பெங்களூர்.

ஏஜண்டுகள்:– மெஸர்ஸ் பெஸ்டு அண்டு கோ., லிமிடெட்,
தபால் பெட்டி 63, மதராஸ்.



ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
45, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

செந்தமிழ்க் கலையுடன் சுவையும் இன்சொலும்
தேர்ந்துயாம் வாழ்ந்திடும் வகையருள் வாணி "தேன்"

மாலை 9	JUNE 1943 :: சுபானு௵ ஆனி௴	முத்து 6

பொருளடக்கம்

	விஷயம்.			பக்கம்
1	நீதிபதி எம். பதஞ்சலி சாஸ்திரியார்	....	கா. சி. வேங்கடரமணி	162
2	வேலைக்கு கூலியுண்டா?	....	'பௌராணிகன்'	164
3	என் ஷஷ்டியப்த பூர்த்தி - எது இன்பநிலை?	....	கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி	169
4	குழந்தையின் புலர்பல்	....	ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன்	173
5	ரண வைத்தியம்	....	டாக்டர் ஆர். கிருஷ்ணமூர்த்தி	177
6	வேப்பாரம்	....	ராமநாத சர்மா	180
7	போர்	....	'ஸாரதி'	181
8	சிறுவர் பகுதி:—	....		183
9	'புது வைஸ்ராய் தேவை'	....		188
10	'பெரியார்' : குணநிசாரங்கள்	....	வெ. க. ராமநாதன்.	191
11	அரிசி, மாவு இயந்திர பகிஷ்காரம்	....	கண்ணன்	192

"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

Edited & Published by K. S. Venkataramani. at No. 45, Mahadana Street, Mayavaram. printed by V. Ramamurthi B. A., at the Mirasdar's Welfare Press 29 Mahadana Street, Mayavaram.

நீதிபதி எம். பதஞ்சலி சாஸ்திரியார்

கா. சி. வேங்கடரமணி

ஸர் எஸ். வரதாச்சாரியார், பி. ஸீதா ராமராவ், டி. ஆர். வேங்கட்ராம சாஸ்திரி, எஸ். பஞ்சாபகேச சாஸ்திரி, கே. வி. சேஷ ஐயங்கார் இவர்களைப் போலொத்த உத்தமர்கள் நியாயவாதித் தொழிலில் பூராவும் ஈடுபட்டும் எப்படித் தன்னலமும் தன்மையும் அழியாமல்வளர்ந்து வருகிறார்களென்று நான் அடிக்கடி ஆச்சர்யப்படுகிறதுண்டு. லாப நஷ்டத்தையும், வெற்றியையும், தோல்வியையும் முகங்கோணாமல் அங்கீகரித்துத் தனக்கேற்பட்ட ஸ்வதர்மத்தை தேவ கைங்கர்யம்போல் செய்து, இந்த சுழல் உள்ள தொழிலின் நடுவில்நின்று, தங்கள் சிறப்பையும் கற்பையும் அழியாமல் ஊக்கத்துடன் காப்பாற்றி வருகிறார்கள். ஓடும் ஆற்றுச் சுழலில் ஆழ்ந்து அழிந்து போகாமல் புன் சிரிப்புடன் மிதக்கும் புஷ்பத்திற்கு இவர்களை ஒப்பிடலாம்.

ஈசலைத்தேடி கரையான் (பாம்பு)புற்றை வெட்டின வேடன் நாகரெத்தினத்தைக் கண்டெடுத்ததுபோல் நான் இவர்களைக் கருப்புடை அணிந்து அணிவகுத்துச் செல்லும் வக்கீல்கள் நடுவில் கண்டு களித்தேன். இந்த பொறுக்கியெடுத்த வகுப்பில்கூட நீதிபதி பதஞ்சலிசாஸ்திரியார் ஓர் உன்னத ஸ்தானத்தைத் தன் குண விசேஷத்தால் வகிக்கிறார்.

2

1889௵ ஜனவரி௴ 4௳ ஸ்ரீமான் பதஞ்சலிசாஸ்திரியார் பிறந்தார். சொந்த ஊர் மண்டகுளத்தூர். சீலத்தை அடிப்படையாகக்கொண்ட ஸம்ஸ்கிருத பாண்டித்ய பரம்பரை. இவர் தகப்பனார் மண்டகுளத்தூர் கிருஷ்ண சாஸ்திரிகள். பச்சையப்பன் காலேஜில் அவர் சமஸ்கிருத பண்டிதராக இருந்து ஒழுக்கத்திற்கும் வித்பத்திக்கும் பெரும் புகழ் பெற்றவர். தன் தந்தையின் வாழ்வே ஸ்ரீமான் பதஞ்சலி சாஸ்திரியாருக்கு ஒரு பெரிய வழிகாட்டியாக இருந்தது. பேருடனும் புகழுடனும் பச்சையப்பன் காலேஜில் பி. ஏ. பாஸ் செய்துவிட்டு 1914ம் வருஷத்தில் ஹைக்கோர்ட் வக்கீலாகப் பதியப்பட்டார்.

விசால புத்தியும் பெருந் தன்மையும் வாய்ந்த பெரிநாராயணமூர்த்தி என்ற ஆந்திர வக்கீல் தலைவரிடம் ஸ்ரீமான் பதஞ்சலி சாஸ்திரியார் தொழில் கற்றுக் கொண்டார். பிறகு, நண்பர்களைப்பொறுக்கியெடுத்து முன்னேற்றம் அடையும்படிச்செய்யும் தன்மை வாய்ந்த ஸர் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யரைச் சேர்ந்து ஸ்ரீமான் பதஞ்சலி சாஸ்டிரியார் தொழிலில் வெகு சீக்கிரத்தில் முன்வந்தார். 1924ம் வருஷத்தில் வருமானவரி கேசுகளுக்கு ஸர்க்கார் வக்கீலாக நியமிக்கப்பட்டார். தொழிலில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டே வந்தார். ஈசனிட்ட தொழிலையே ஒரு யோக ஸாதனமாகக் கையாண்டு வந்ததின் பலன், 1939ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் சென்னை ஹைக்கோர்ட்டில்நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

3

ஸ்ரீமான் பதஞ்சலி சாஸ்திரியாரோடு நான் நெருங்கிப் பழகியது கிடையாது. ஆனால் இவரை நான் எப்பொழுதும் கடைக்கண்ணால் இருபது வருஷ காலமாக, நான் வக்கீலானது முதல் கவனித்துக் கொண்டே வந்ததுண்டு. எனக்கு இவரிடத்தில் ஒரு தனிக்கவர்ச்சி இருந்து கொண்டிருந்தது. இவர் முகத்தில் ஒரு தெளிவான ஒளி சாந்தமான பார்வை. அடக்கத்தைக் காட்டும் நடை உடை பாவனை. சொல் நயம். மரியாதை மட்டுகள், அகம்பாவமே தோற்றாத பழக்க வழக்கங்கள். கபடமற்ற பரந்தசிரிப்பு.

இதர வக்கீல்கள் மாதிரி எல்லோருடனும் கலகலப்பாய் ஸ்ரீமான் சாஸ்திரியார் கலக்கமாட்டார். ஸர். எஸ். வரதாச்சாரியார் கிட்டங்கூடக் கலகலப்பாய் இருக்கமாட்டார். ஸ்ரீமான் பி. சீதாராமராவ் எதிலும் கலப்பார்; ஆனால் ஒன்றிலும் சார்ந்து ஒட்டமாட்டார். அவர் தூய்மை எரியும் நெருப்பைப்போல்தொட்டதைப் பரிசுத்தமாக்கி தணிந்துபோகும்.

நாங்கள் எல்லாரும் 'அட்வகேட்ஸ் அஸோஸியேஷனி'ல் சத்தியமூர்த்தியின் தலைமையில் கூட்டங்கூடி தினசரி அரசியல்வம்பு அளந்து கொண்டிருக்கும் பொழுது ஒரு ஓரத்தில் ஒரு தனி நாற்காலியில் உட்கார்ந்து மடிநிறையப் புஸ்தகங்களுடன் தலைகுனிந்து படித்த வண்ணம், காற்றில்லாத ஒரு ஓரத்தில் பூஜைக்கு ஏற்றிவைத்த குத்துவிளக்கைப் போல் மினுமினுப்புடன் ஸ்ரீமான் பதஞ்சலி சாஸ்திரியார் பிரகாசித்துக் கொண்டிருப்பார். இதையும் நான் கடைக்கண்ணால் பார்த்து ஆனந்தித்து நாமும் ஏன் இந்த வீண் வம்பிலிருந்து விலகி இப்படி இருக்கக்கூடாது என்று ஒரு க்ஷணம் வீண் எண்ணம் எண்ணுவேன்!

நீதிபதி எம். பதஞ்சலி சாஸ்திரியார் வினயத்தையும் தைர்ய லக்ஷ்மியின் கடாக்ஷத்தையும் பூர்ணமாகப் பெற்றவர். மனச்சாட்சிக்குவிரோதமன்றியில் நடப்பவர் தர்மத்திலும் சீலத்திலும் ஒழுக்கத்திலும் ஆழ்ந்திருப்பவர். இதுதான் இவரது தந்தை இவருக்குக்கொடுத்த மதிப்பற்ற பிதுரார்ஜிதம் என்று எண்ணுகிறேன். எல்லா விஷயங்களையும் பொது அறிவை ஊட்டிப் பார்க்கும் சக்தியுள்ளவர். இவர் வெற்றிக்கு இதுஒரு முக்கிய காரணம்.

உயர்தரப்பதவி. ஆனால் வயது ஐம்பத்தைந்துதான். இப்பொழுது ஸர் எஸ். வரதாச்சாரியார் டில்லியில்பெரும் கியாதியுடன் கையாண்டுவரும் உன்னதப் பதவியை ஸ்ரீமான் பதஞ்சலிசாஸ்திரியாரும் காலக்கிரமத்தில் அடைவாரென்று நான் நம்புகிறேன்.



வேலைக்குக் கூலியுண்டா?

"பௌராணிகன்"

சிறலூர் கிராமத்தில் எங்காவது ஒரு திண்ணையிலோ அல்லது மரத்தினடியிலோ அல்லது கோவிலின் பக்கத்திலோ ஒரு பலத்த குரலுடன் பிரசங்கத்தைக் கேட்டீர்களேயானால் கட்டாயம் பிரசங்கி அவ்வூர் அரசியல்வாதி ஆறுமுக நாயக்கரென்றறியுங்கள். அக்கூட்டத்தில் அவ்வூர் பெரிய தனக்காரர் பரஞ்சோதி பிள்ளையும் தவறாமல் இருப்பார். பல நாட்களாகவே இவ்விருவருக்கும் பொருளாதார அரசியல் தத்வ விசாரணைகளென்றால் மிக்க ஆர்வத்துடன் சம்பாஷணைகள் தொடங்கும். ஆறுமுக நாயக்கர் தத்கால அரசியல் கக்ஷிகளில் பங்கெடுத்துக் கொள்ளமாட்டார். அவர் மனோவேகம் பல வருஷங்களுக்கு முன்னும் பின்னுமாக ஓடிப் பழமைக்கும் புதுமைக்கும் ஒற்றுமைகளைச் சிருட்டித்தானந்திக்கும். பரஞ்சோதி பிள்ளையும் இவ்விசாரணையின் சித்தாந்தங்களையறிய ஆவலுடன் பலகேள்விகளைப் போடுவார். ஆறுமுகநாயக்கரின் அரசியல் கீதைக்கு அர்ச்சுனன் பரஞ்சோதிபிள்ளை என்றால் வேறு அதிகம் சொல்லுவானேன்?

வழக்கப் பிரகாரம் ஓர் பிரசங்கமாரி "வேலையில்லாத் திண்டாட்ட"த்தைப் பற்றி முடிவுபெறும் தறுவாயில் ஆறுமுக நாயக்கர் உணர்ச்சி ததும்ப எல்லோரையும் பார்த்து "இது வேலை இல்லா திண்டாட்டமா; அல்லது கூலி இல்லா திண்டாட்டமா? சொல்லுங்கள்" என்றார். பலகுரல்கள் முன்னதையும் பலகுரல்கள் பின்னதையும் சொல்ல பிரசங்கியின் தன்மையறிந்த மற்றும் சிலர் அவரே பதில் சொல்லட்டுமென்று வாளாவிருந்தனர். இதில் பரஞ்சோதி பிள்ளையும் ஒருவர். உடனே நாயக்கர் "என்னபிள்ளைவாள், நீரும்தான் சொல்லுமே என்னவென்று. இப்பொழுது வேலைக்குக் கூலியுண்டா?" என்றார்.

"யாராவது இல்லை என்று சொல்லுவார்களா?" என்றார் பரஞ்சோதி பிள்ளை.

ஆறு: வேலைக்குத் தகுந்தக் கூலி, எல்லா வேலைக்கும் கூலி என்று இப்பொழுது கிடைக்கிறதா என்று நான் கேழ்க்கிறேன். கூலி கிடைக்கிறது சில பொழுது என்பதை நான் அறிவேன். ஆனால் எல்லா வேலைக்கும் கிடையாது. ஒரேமாதிரியும்கிடையாது. சமயோசிதம் போல் தங்களுக்குத் தேவையான வேலையைச்சிலர் வாங்கிக்கொண்டு தங்களுக்கிஷ்டமான பொருளை யாசகம் போல்கொடுக்கிறார்களே, அதற்கு 'கூலி' என்ற ஜம்பப்பெயர் என்று நான் சொன்னால் இல்லை என்று மறுதலிக்க உங்களில் யாருக்கும் தைரியம் வருமா கூறுங்கள்.

பரஞ்சோ: ஆமாம் நீர் சொல்லுவது உண்மைபோல்தான் படுகிறது. ஆனால் தேவையில்லாத வேலைக்கு யார் கூலி கொடுப்பார்கள்? மேலும் நாலு பேர் ஒப்புக்கொள்ளுகிற கூலியைக் கொடுத்தால் யாசகமாகுமா? தவிர பொருளாதார நிபுணர்கள் எல்லோரும் அடிக்கடி 'தேவைக்குத் தகுந்த கொடுப்பினை, (Supply to Demand) என்ற தத்துவத்தை விளக்கிச்சொல்லுகிறார்கள். எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்களே; நீங்கள் மட்டும் வேறு வியாக்கியானம் தொடங்கப் போகிறீர்களோ!

ஆறு: நானெங்கே வேறு விஷயங்களைக்கூறுவது? திருப்பித்திருப்பிச்சொன்னாலும் பழைய இராமாயணத்தைத்தான் சொல்ல வேண்டுமேயொழிய வேறு என்ன வழி இருக்கிறது? எங்கெங்கு சரியானபடி பின்பற்றாமல் வழி தவறுகிறோமோ அங்கு மட்டும் நேர்வழியைப் புலப்படவைத்துப் பழைய வழியிலேயே

போகும்படிச் செய்வதுதான் என்னுடைய புது வ்யாக்கியானம். இப்பொருளாதார தத்துவத்தை எதிர்க்க பிரம்மாதிகளினுல்கூட முடியாது. அவரெழுதிய எழுத்தை அவரே அழிக்க முடியாது. பிறகு பல யுக்திகளைச் செய்து வரம் பெற்றவர்களை அழிக்கப்பிரயத்தனப்படும் கதைகளைக்கேழ்க்கவில்லையா? அதுபோல் எல்லோரும் "தேவைக்குத் தகுந்த கொடுப்பினை" என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள். அதன் விளைவு பாருங்கள், எங்கு பார்த்தாலும் விளம்பரங்கள். நான் முந்தி நீ முந்தி என்று போட்டிப் போட்டுக்கொண்டு "என் பொருள்தான் "தேவை" என்று சொல்லுங்கள். அப்பொழுதுதான் என் பொருளை உங்களுக்குக்கொடுக்க சட்டம் இடம் தரும்." என்று கூறுமல் கூறுகிறுர்கள். இன்விலைதான் பரம தத்துவ ஞானிகளும், நவீன பொருளாதார சாஸ்திரிகளும், அரசியல் வாதிகளும் சேர்ந்து செய்துவரும் கைங்கர்யத்தின் பத்தியில் நாம் இன்று கண்கூடாகப் பார்ப்பது. தேவையைப்பூர்த்தி செய்வதை விடுத்துத் தேவையை உற்பத்தி செய்வதில் முனைந்துவிட்டார்கள். அதன்விளைவுதான் கூலி இல்லாத் திண்டாட்டம் தேவையை அதிகரிக்குமுன் வேலைக்குத் தகுந்த கூலி இல்லை. கௌரவமாக 'வேலை இல்லைபோ' என்ற சொல் பிறக்கிறது.

பரஞ்: ஆமாப், சிறுகச்சிறுக உலகம் தலைகீழாக மாறுகிறது. இருந்தாலும் இச்சுழலிலிருந்து தப்புவது முடியுமா? ஊரோடு ஒத்துத்தானே வாழவேண்டும்? இக்குக்கிராமத்தில் நீர் சொல்லும் தத்துவத்தை யார் அறிந்து அதன்படி நடக்கப் போகிறுர்கள்?

ஆரு: ஏன் இவ்வளவு ஏக்க முறுகிறீர்கள்? நாம் நம் கடமையைச்செய்ய வேண்டியது. மீதி அவன் விட்ட வழி. மனத்தில் தூய்மையான எண்ணங்களுடன் ஆராய்ச்சி செய்து சங்கல்பங்கள் செய்தோமேயாகில் தத்கால ரேடியோவும் வைக்கும் போல மற்றைய தத்துவ ஞானிகளின் ஹ்ருதயங்களிலும் இவ்வலை ப்ரதிபலிக்கும். உரக்கப்பேசித்தான் பிரசாரம் செய்யவேண்டுமென்பதில்லை. மனேவேகத்தின் சக்தியை நீர் அறிந்ததில்லையா? ஆகவே, செய்வன திருந்தச் செய். எல்லாம் ஈசன் செயலென்றே கர்ம யோகியாகத்தான் பாடுபட வேண்டும்.

பரஞ்: நீர் எப்பொழுதும் இப்படியேதான் மடக்கிவிடுகிறீர். சரி; உங்கள் தத்துவத்தை விசாரிப்போம். வேலை என்பது என்ன?

ஆரு: அப்படிக் கேளும். ஒருவன் மற்றொருவனுக்குச்செய்யும் எவ்வித உபகாரமும் வேலை எனப்படும். அதை நேரிட ஒருவனுக்கு செய்தாலும்' அல்லது பிற்பாடு எப்பொழுதாவது உபயோகப் படலாமென்று ஒருவருக்கோ பலருக்காகவோ செய்து வைக்கப்படும் எல்லா விதமான உபயோககரமான பொருளும் ஒருவன் செய்த அல்லது செய்கிற வேலை என்று சொல்லலாம்.

பரஞ்: ஒருவாறு புலப்படுகிறது. அப்பொழுது கூலி என்பது?

ஆரு: கூலி என்பது ஒருவன் உடனுக்குடனேயோ அல்லது பிற்காலத்திலேயோ நேரிடவோ மறைமுகமாகவோ செய்ய விரும்பும், அல்லது செய்கின்ற ப்ரத்யுபகாரம். சுருங்கச் சொல்லின் கூலி என்பது வாக்களிக்கப்பட்ட வேலை. (Wage is but a defened work).

பரஞ்: அப்படியானல் வேலைக்காக நாம்கொடுக்கும் ரூபாய் முதலியவைகள் கூலி இல்லையா?

ஆரு: கூலிதான். அதுவும் ப்ரத்யுபகாரம்தான். என்றல் இப்பொழுது ஒரு பதில்வேலை உங்களுக்குச் செய்ய முடியாது. அல்லது இப்பொழுது நான் செய்யும்வேலை உங்களுக்குத்தேவையாக இருக்காது. ஆகவே பிறகு எப்பொழுதாவது நானே அல்லது வேறு ஒருவரோ உங்களுக்குத் தேவையான உபகாரம் செய்யக்கூடியவராக இருப்பார். அவ

ரிடம் இந்தநாணயத்தைக் காட்டி வாக்களிக்கப்பட்டபடி உபகாரம் செய்யுங்களென்றுகூறினால் தவறாமல் நாணயத்தை காற்பர் அறிவுடைய பொதுஜனங்கள் என்று கூறி அடையாளமாக ரூபாய் முதலிய நாணயங்களைக் கூலியாகக் கொடுக்கிறீர்கள். உடவுக்குடனேசெய்யப்படாமல் பிறகு கிடைக்கப்பெறலாம் என்று வாக்குறுதிக்கு ஈடு இது. ஆகவேதான் "கூலிஎன்பது வாக்களிக்கப்பட்ட வேலை" என்கிறேன். ஒப்புக்கொள்ளுகிறீரா?

பரஞ்: புரிந்தது. நாயக்கரே, உங்கள் வியாக்யானம் வெகு நன்றாகப் பதிகிறது மனதில். எல்லோருக்கும் பசியின் கொடுமை இருக்கிறது. இன்னும் பல சௌகரியங்கள் பிறரிடமிருந்து அடைய வேண்டுமென்றுவிரும்புகிறார்கள். அதை விரும்பிக் கோரினால் சௌகரியங்களையோ உணவையோ கொடுக்கிறவர்களுக்கு, கொடுக்க நாணயங்கள் அனேகரிடம் இல்லை. தங்களால் செய்யக்கூடியவேலையோ அல்லது உபகாரங்களோ உணவளிப்பவர்களுக்குத்தேவையில்லாததாக விருக்கிறது. ஆகவே வாக்களிக்கப்பட்ட வேலையே வேண்டுமென்று கோருகிறார்கள். இன்னிலையில் கூலியை கொடுக்க வகையறியாமல் பலரும் கூலி இல்லாத்திண்டாட்டத்தை யடைகிறார்கள். சபாஷ்! நீங்கள் சரியான கேள்வி போட்டீர்கள். உண்மையில் நாம் இன்றய நிலையில் பார்ப்பது "கூலியில்லாதிண்டாட்டமே யொழிய வேலை இல்லா திண்டாட்டமில்லை" கூலியை சம்பாதிக்க வேலை செய்கிறேனென்றால் வேலையைப்பெற்றுக் கொள்ளுவோரை சுலபத்தில் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே "வேலை இல்லாதிண்டாட்டம் அல்லது வேலையைப் பெற்றுக் கொள்ளுவோர்களில்லாதிண்டாட்டம்" என்று கூக்குரல்கள் கிளம்புகின்றன.

ஆர்: என்ன இருந்தாலும் நீரும் ஒரு தத்துவ ஞானிதான் ஐயா. இவ்வளவு தனப்படைத்த பெரிய தனக்காரராயிருந்தும் இவ்வளவு அழகாக இத்தத்துவத்தை யலசிக்காட்டுகிறீர்களே. பரஞ்சோதி பிள்ளைவாள், பரமன் சோதி உங்களுள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிகிறது. "குருவின் மோனவ்யாக்யானம் சிடனின் சித்தத்தெளிவு" என்றிருக்கலாமென்று எண்ணுகிறேன்

பரஞ்: வேண்டாம் அதற்குள் மௌனம். ஆராய்ச்சியை சாயகோபாங்கமாக முடித்துவிட்டு நிஷ்டைகொள்ளலாம்.

ஆர்: அப்படியானால் "அடியைப் பிடியடா பாரதபட்டா" என்றுதான் சொல்லவேண்டும். ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட பிறப்புரிமை என்னவென்று தொடாங்குவோம். யாதொருவருடைய விருப்பு வெறுப்புக்களினால் கட்டுப்படாமல் கடவுளின் லீலையினாலேயே இப்பூலோகத்தில் தோன்றி இருக்கும் தனிநபர் ஒவ்வொருவருக்கும் ஜீவாதாரமான உரிமைகளாவன; (1) இப்பறந்த உலகத்தில் எங்கு வேண்டுமானாலும் சஞ்சரித்துத்தங்குவது.

(2) தனக்கு வேண்டிய உணவை இயற்கைசேமித்துவைத்திருக்கும் களஞ்சியத்திலிருந்து தங்குதடை இல்லாமல் பற்றிக்கொள்ளுவது.

(3) தனது வாழ்க்கையின் லக்ஷ்யம் என்னவென்று ஆராய்வதிலும், அதை யடைய முயற்சிப்பதிலும் பிறர்ஒருவரும் குறுக்கிடக் கூடாதென்று மருகவிக்கும் உரிமை.

(4) தனக்குத் தேவையான பொழுது பிற ஒருவரின் உதவியைக் கோரலாம் என்ற உரிமை. ஆனால் அவன் உதவ விரும்பாவிட்டால் அது அவனுரிமை என்று கண்டு, தன்னையும் பிறருக்குதவும்படி வலுக்கட்டாயப் படுத்தப் பிறருக்குரிமை இல்லை என்ற ஓர் பாதுகாப்பு.

இவ்வித உரிமைகளைப்பற்றி கருத்துக்கள் பிறக்கின்றன. தன்னைப்போல் பிறனொருவனுக்கும் இவ்வுரிமைகள் உண்டென்று நினைத்த மாத்திரத்தில் சாந்தமாக விவேகத்துடன் பரஸ்பர நியமங்களை ஏற்படுத்திக் கொள்ளும் மனப்பான்மை

ஏற்படுகிறது. அப்படி பழகப்பழக மனிதர்களுக்குள் தோன்றியதாவது, அவரவர்களுடைய புண்ய விசேஷத்திற்த தகுந்தாற்போல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விசேஷசக்தியை பெற்றிருந்தார் என்பதே. அச்சக்தியின் விளைவாகக் கிடைக்கக்கூடிய பலன்கள் தங்களுக்கும் கிடைத்தால் வாழ்க்கையின் லக்ஷ்யத்தில் இன்னும் இடைஞ்சலின்றி மனம் பதியுமென்று தோன்றவே அப்பலனை யாசித்தார்கள். பிரதியுபகாரமாக, தங்கள் தங்கள் சக்திக்கியன்ற பலன்களையளிக்க உடன்பட்டார்கள். இவ்வேற்பாட்டிற்குடன்பட்ட எல்லோரும் "எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் இன்னாட்டு மன்னர்" என்று கூறினார்கள். இப்படி பரஸ்பர உபகாரம் செய்துகொள்வதில் நம்பிக்கையற்றவர்களெல்லாம் தங்களிஷ்டப்ரகாரம் காட்டில் சஞ்சரித்துக்கொண்டு, நாட்டில் புகுந்த பொழுது நாட்டிலுள்ளவர்களின் உரிமைகளில் சிறிதும் குறுக்கிடாமல் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் புறத்துலகைக் கவனியாது அகத்துள் பரத்தைக்காண விழைந்தார்கள். இவ்வித மோனமுனிகளும் நமக்கு ஓர் எடுத்துக் காட்டாகிய உபகாரமேயென்று நம்பிய ஜனங்கள் ப்ரத்யுபகாரமாக ஆகாராதிகள் கொடுத்து பூஜித்தார்கள்.

நிற்க புரஜனங்களெல்லோரும் ஒருவருக்கொருவர் ப்ரத்யுபகாரம் செய்து வாழ்ந்துவர ஓரிடைஞ்சல் எல்லோரும் எல்லோர் தேவையையும் ஏககாலத்தில் அறிந்துதவ சாதனங்களின்மையே. இதை நீக்கக்கருதி பொதுவாக ஒருஸ்தாபனம் ஏற்பட வேண்டுமென்றே விரும்பினார்கள். இதன் பயன் ஓர் **அரசாங்கம்.**

பரஞ்: நாயக்கரே, வேலைக்கும் கூலிக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றி விவரிக்கச்சொன்னால் முதல் முதல் அரசாங்கம் வந்தவழி சொல்லுகிறீரே.

ஆறு: அவசரப்படாதீர். தானே தெளிவு காண்பீர். இப்படித்தங்களுக்கு ஒரு உதவியாக அரசாங்கத்தை சிருஷ்டித்தார்கள். இதன் முக்கியகாரியம் ஒருவருக்கொருவர் வேண்டுமான தேவைகளுக்கும் அமைதிக்கும் பங்கம் ஏற்படாமல் வழிசெய்வது. தங்கள் வேலையைப் பெற்று "வாக்களிக்கப்பட்ட வேலை" அல்லது கூலிதங்களுக்குக்கிட்ட ஏற்பாடு செய்வது. இத்துறையில் பலனளிக்காவிட்டால் இது தன் காரியத்தில் தவறிய அரசாங்கமாகும். வேலைசெய்ய எல்லோரும் தயார் தான். இவர்கள் வேலையையுபயோகப்படுத்திக்கொள்கிறவர்கள் யாரென்று தேடித் தருவது அரசாங்கமாக இருக்க வேண்டும். இந்த தருமத்தை நிலைநாட்ட வேண்டுமென்றால் மற்றொருவர் இக்காரியத்தில் குறுக்கிடாமலிருக்கவேண்டும். அதாவது ஒருவரும் அரசாங்கத்தை கலக்காமல் நேரிட வேலைக்கு யாரையும் எடுத்துக்கொண்டு கூலி கொடுக்க உரிமைபாராட்டக் கூடாது. ஷராப்பையும் பாங்கியில் வைத்துவிட்டு காரியதரிசியும் நேரிட பட்டுவாடா செய்ய ஆரம்பித்துவிட்டால் எப்படி நாணய வரவுசெலவுக் கணக்குப்பதிவது பாதிக்கப்படுமோ அவ்விதம் அரசாங்கத்திற்கு ஓர்வேலையை ஒப்புவித்துவிட்டு தனியொருவன் அக்காரியத்தைச்செய்வதும். ஆகவே வேலை இல்லாதிண்டாட்டத்தைப்போக்க முதல் வழி வேலைக்காரர்களைக் கோருவோர்களின் பெயர்களையும் தேவையையும் அரசாங்கம் பதிவு செய்யவேண்டும். அவர்கள் அளிக்க வேண்டிய கூலியையும் நிர்ணயித்து வசூலிக்க வேண்டும். அதேமாதிரி வேலை செய்ய விரும்புவோர்களின் வேலை விபரம் முதலியவைகளையும் பதிவு செய்து பிறகு அவரவர்களுடைய தேவைக்குத் தகுந்தாற்போல் ஒருவருக்கொருவர் பரிமாற வேண்டும். சிலபேர்களுடைய வேலை ஒருவருக்கும் தேவை இல்லாமலிருக்கலாம். அப்படிப் பட்டவர்களின் வேலையை அரசாங்கமே பெற்றுக் கொண்டு கூலி கொடுக்கவேண்டும். சில பேர்களின் தேவையைப்பூர்த்தி செய்ய ஒருவராலும் இயலாமலிருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் தங்களுக்கிஷ்டமான இடம் சென்று தங்கள் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளலாமென்று அரசாங்கம் இடம் கொடுக்கவேண்டும்.

அதாவது அரசாங்கத்தின் பிடியிலிருந்து வெளியேறவும் இடமளிக்க வேண்டும். அதேமாதிரி பலபேர்கள் சேர்ந்து சிலருடைய வேலை ஒருவருக்குப் தேவை இல்லை என்றும், தங்கள் வேலையை அச்சிலருக்குதவவிரும்பவில்லை என்றும் கூறினால் இச்சிலர் இவ்வரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படக் கூடாதவர்களென்று பாவிக்கப்பட்டு அவர்கள் இஷ்டப்பிரகாரம்வேறுஇடம்போகவோ, காட்டில் வாழும் முனிகளைப் போல இருக்கவோ அனுமதிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் வேலை இல்லாத் திண்டாட்டம், கூலி இல்லாத்திண்டாட்டம் முதலியவைகள் ஒழியும்.

பரஞ்: அவ்வளவாகப் புரியவில்லையே. சற்று விளக்கிக்கூறும். அரசாங்கம் என்னசெய்யவேண்டும் என்பதை உதாரணத்துடன் கூறும். வெறும் வேதாந்தம் போல் சொன்னால் கிரகிக்க முடியவில்லை. இப்பொழுது யாராவது வேலை கொடுத்தால் அரசாங்கம் அதைத் தடுக்கிறதா? இதற்கெல்லாம் அரசாங்கத்தை என் இழுக்கிறீர்? அரசாங்கத்தில் வேலை காலியில்லாவிட்டால் ஜனங்கள்தான் வேறு வழிதேடவேண்டும். நடைமுறையில் நடக்கக்கூடியதைச் சொல்லுங்களேன்.

ஆறு: நான் வேறொன்றும் கூறவில்லை. ஒவ்வொருவரும் எந்தத் தொழில் செய்யக்கூடியவர்களாக இருந்தாலும் அத்தொழிலினால் செய்யப்படும் பொருள்களையெல்லாம் நேரிட அரசாங்கமே வாங்கிவிட வேண்டும். யாருக்காவது பொருள் தேவையாகவிருந்தால் அரசாங்கத்திடம்தான் பெறவேண்டும். பொருளாகச் செய்யாமல் உழைப்புதான் சிலர் செய்யும் வேலையாக விருக்கலாம். அவ்வுழைப்பாளிகளுக்கெல்லாம் அரசாங்கம் கூலி விதித்துச் சம்பளமாகக் கொடுத்துவிடவேண்டும். இவர்களின் உழைப்பைப் பயன் படுத்திக் கொள்ள விரும்பும் மற்றவர்கள் அரசாங்கத்தினிடம் கூலி செலுத்திப்பெறவேண்டும் உழைப்பாளிகளினுழைப்பை.

பரஞ்: அப்படி ஒவ்வொரு காரியத்தையும் செய்தால் ஜனங்களுக்கென்று தனி சுதந்திரம் இல்லையா? எல்லாம் அரசாங்கமயமாகச் செய்துவிடச் சொல்லுகிறீர்களே?

ஆறு: பிள்ளைவாள், திடீரென்று ஏது மயக்க முற்றீர்கள்? அடிமை நாட்டில் அரசாங்கம் வேறு; ஜனங்கள் வேறு. ஆனால் சுதந்திர நாட்டில் இருவர்களும் ஓரினமே. ஜனங்களால் நியமிக்கப்பட்ட ஓர் சாதனமாக அரசாங்கம் ஏற்பட்டதென்று ஆரம்பத்திலேயே சொன்னேனே, மறந்து விட்டீரா என்ன? நம் போன்றவர்களுக்கு தீர்க்கதிருஷ்டி வேண்டும். தற்கால வாசனைகளை மீறி சுதந்திர ஒளிகொண்டு பாரும். தெற்றென விளங்கும். 'ஸ்வதந்திரம், ஸ்வதந்திரம்' என்றுபிதற்றுகிறீர்கள். சுதந்திரம் எத்தன்மையது என்று விளக்கிக் கூறினால் சுதந்திரம் பறிபோய்விடுகிறாப் போல் பதறுதேயும். மேற்சொல்லியவாறு வேலை இல்லாத்திண்டாட்டத்தை ஒழிக்க முற்படாத வரையில் சகல சுதந்திரங்களும்வெட்டுச்சுரைக்காய்தான். மறுபடியும் கூக்குரல் கிளப்பும். "வேலைக்குக் கூலியுண்டா?" என்று இதையே ஜபம் செய்யும். வெட்டவெளியினின்றும் பதில் ப்ரதிபலிக்கும்; 'உண்டு, சுதந்திர நாட்டில்' என்று.

என் ஷஷ்டியப்த பூர்த்தி-எது இன்ப நிலை?

திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி

காலையில் என்ன அமைதி அழகு! காலைக்காற்று உடலின் மேல் படும் பொழுது என்ன இன்பம்! அருணோதயம் என்ன சிங்காரம்! சூர்யோதயப் என்ன பிரகாசம்! பிறகு பொழுது போகப்போக என்ன உஷ்ணம்! ஆனால் மாலைப்பொழுது நெருங்க நெருங்க வெப்பம் குறைந்து குளிர்ந்தகாற்று வீசுகின்றது. ஒரு புதிய அமைதி உலவுகின்றது. வானத்தில் கதிரவன் மறையும் முன் விசித்திர வர்ணங்களின் ஒளிபரப்பு என்ன வனப்பு! கதிரவன் மறைந்தபின் அளவற்ற நக்ஷத்திரங்களின் அழகு என்ன மனோகரம்! அதிலும் வளர்பிறையில் நாளுக்கு நாள் ஒளி ஏறிஇறங்கும் சந்திரனுடைய பிரகாசம் எவ்வளவு மோகனமாக இருக்கின்றது! பூர்ணிமையன்று என்ன ஜோதி! இவ்வளவு அழகுகளும் நிரம்பிய நாட்கள் சிலதான். ஆனால் கருமேகம் நிறைந்து புயல் காற்று வீசி மழைப்பிரவாகமாகக் கொட்டும் நாளாக மாறினாலும் மாறலாம். எவ்விதமாகத்தான் இருக்கக்கூடுமென்று எவரால் கூறமுடியும்? ஆனால் முன் கூறியபடி நேர்ந்தால் என்ன இன்பம்!

இப்படித்தான் மானிட வாழ்வும். குழந்தைப்பருவத்தில் மிக வேடிக்கை ஆதரவு இன்பம். வயது செல்லச்செல்ல மிகக் கவலைகள். படிப்பில் ஈடுபடுதல். பிறகு நல்ல உத்தியோகத்தைத்தேடுதல். 'அன்ன விசாரம் அதுவே விசாரம் அது ஒழிந்தால் சொன்ன விசாரம்' என்று கூறுகின்றார் பட்டிணத்தார். பிறகு அழகிய மங்கையை மணக்க வேண்டும் என்ற பேராசை. அதற்குப்பிறகு பணம் பதவி பட்டங்களில் மோகம். என்ன உக்ரமான நோக்கங்கள்! மனதிற்கு என்ன சஞ்சலம், என்ன கள்ளத்தனம், என்ன மாயை, என்ன வஞ்சனை! மனத்தில் ஒன்று பேச்சில் ஒன்று செயலில் ஒன்று. வன்மையுள்ளவர்களைக்கண்டால் பொறுமை, இளைத்தவர்களைக் கண்டால் பெருமை, மேன்மையுள்ளவர்களைக் கண்டால் பொறுமை, தாழ்மையுள்ளவர்களைக் கண்டால் மகிமை, தெய்வத்தை இகழ்தல், தன் மார்புதட்டிப் பேசும் சுயமரியாதை, பிறரை இகழ்ந்து கூறல், தன்னைப் புகழ்ந்து கூறல், பிறரை மோசஞ் செய்து பொருளீட்டல், இவை தவிர என்ன என்னவோ கூறவே முடியாது.

வாதுக்குச் சண்டைக்குப் போவர்வருவர்
[வழக்குரைப்பர்,
தீதுக்குதவியுஞ் செய்திடுவர், தினந்தேடி
[யொன்று,
மாதுக்களித்து மயங்கிடுவர் விதிமாளுமட்டு
மேதுக்கிவர் பிறந்தாரிறை வாகச்சியே
[கம்பனே.

ஓயாமற் பொய் சொல்வர் நல்லோரை
[நிந்திப்பருற்றுப் பெற்ற,
தாயாரை வைவர் சதியாயி ரஞ்செய்வர்
[சாத்திரங்க,
ளாயார் பிறர்க்குபகாரஞ் செய்யார் தமை
[யண்டினர்க் கொன்,
றீயாரிருந்தென்ன போயென்னகாண்
[கச்சியேகம்பனே.

கல்லார் சிவகதை நல்லோர் தமக்குக்
[கனவிலுமெய்,
சொல்லார் பசித்தவர்க்கன்னங் கொடார்
[குருசொன்னபடி,
நில்லாறத்தை நினையார் நின்னாம
[நினைவிற்கற்று,
மில்லா ரிருந்தென்னிறந் தென்புகல்
[கச்சியேகம்பனே.

ஷஷ்டியப்த பூர்த்தி என்ற சொற்றொடர் என்னறிவுக்கு என்ன நினைவு மூட்டுகின்றதென்றால் நான் முன்சொல்லிய

படி பேராசைகளின் வெப்பங் குறைந்து புயற்காற்று பெருமழை இல்லாமல் அமைதியான நேரத்தில் வெண்ணிலாவும் நக்ஷத்திரங்களும் ஒளி வீசும் நிலைதான். அது எவர்க்கும் மனக்கவர்ச்சியை உண்டாக்கும் என்று என் திண்ணமான எண்ணம். நான் உத்தியோகச் சுழலில் கட்டுப்பட்டிருந்த பொழுதே அது என் மனதைக் கவர்ந்துகொண்டேயிருந்தது. ஆனால் நம்முடைய நாட்டில் அந்நிலையை எட்டிப்பார்க்காமல் போனவர்கள் பலர். இந்தியர்களுக்குச் சராசரி வயது இருபத்துஐந்து அல்லவா? அது தவிர நான் வேலையாக இருந்த நியாயாதிபதி இலாகாவில் அகால மரணம் அதிகம். நான் உத்தியோகஸ்தனாகச் சேர்ந்த காலம் எங்கள் இலாகாவில் நமன் விளையாட்டு அதிகப்பட்ட காலம். ஒழிவே இல்லாத வேலைத் தொந்திரவு. கட்டுகளைப்படிப்பது, வாக்குமூலங்களை எழுதுவது, வக்கீல்களின் வாதங்களைக் கேட்பது, தீர்ப்புகளை எழுதுவது ஒரு ரங்கராட்டின இயந்திரம்போல் சுழன்று வந்து கொண்டே இருக்கும். அக்காலத்தில் உடலுக்குப் பலத்தைக் கொடுத்து மனதுக்கு விநோதத்தை யளிக்கும் விளையாட்டுகள் கஸரத்துகளில் கூட ஈடுபாடு கிடையாது. பெரிய உத்தியோகஸ்தர்கள் அத்தகைய சின்னக் கார்யங்களில் தலையிட்டுக்கொள்ளக் கூடாது என்றே இல்லாவிட்டால் வேலை அலுப்பாலோ அல்லது சோம்பலாலோ அத்தகைய விநோதங்களிலும் விளையாட்டுகளிலும் சேர்ந்து கொள்வதில்லை. வேலை செய்யும் காலம் (Service) எல்லாம் கண்மூடிக் கண்திறக்குமுன்பே முடிந்துவிடும். இப்படியேதான் என் வாழ் நாட்கள் வெகுவாகச் சென்று கொண்டிருந்தது. இந்தப்படிதான் மற்றவர்கள் உணர்ச்சியும் இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆனால் கூடியவரையில் நான் என் மனதையடக்கித் திருப்பித் தேகப் பயிற்சியிலும் கலைகளிலும் ஞான நூல்களிலும் பொதுஜன சேவையிலும் என் பிழைப்புக்காக அர்ப்பணம் செய்த காலம்போக மிஞ்சிய காலத்தைச் செலவிடும் முயற்சியை கைக்கொண்டேன். என் தந்தை சென்ற வழியைக் கடைப்பிடித்தேன். அவர் எனக்குச் சிறந்த உயர்ந்த வழிகாட்டியாகவிருந்தார். நான் வேலையிலிருந்து ஒழிவடைந்தபிறகு ஐந்துவருஷங்கள் அவருடனேயே இருந்தேன். திருவருளும் எனக்கு அநுகூலமாக இருந்தது. உயர்ந்த குருக்களும் கிடைத்தார்கள். இன்றைக்கும் கனவோ நினைவோ என்று தோன்றுகின்றது. மெய் சிலிர்க்கின்றது. உண்மையாக உரைக்கின்றேன். 'நாயினுக்குதவிசிட்டு' 'நாய் சிவிகை ஏற்றி' என்று மாணிக்க வாசகர் உரைத்தது என் மனதில் ஒளி வீசிக்கொண்டே இருக்கின்றது.

வெகுவாக வேலையிலிருந்து ஒழிவடையப்பட்டவர்கள் அகமலர்ச்சியுடனும், முகமலர்ச்சியுடனும் வெளியேறுவதில்லை. சிலருக்கு வேலையைவிட்டு நீங்க மனமிருப்பதில்லை. அதிலும் அநேக சேவகர்கள் உள்ள உத்தியோகத்திலமர்ந்திருப்பவர்களுக்கு அந்த ஆடம்பர மயக்கம் போவதில்லை. வேலையின்முடிவில் வந்துகொண்டிருந்த சம்பளத்தைக் காட்டிலும் உபகாரச்சம்பளம் மிகக்குறைவாக இருக்கப் போகிறதே என்று சிலருக்கு ஏக்கம். சிலர் உபகாரச்சம்பளத்துடன் வேறு வேலையிலமர்ந்து அதற்குள்ள வருவாயையும் விரும்புவதும் உண்டு. சிலர் ஒழிவடைந்தே இருக்கவேண்டும் என்றுநினைத்தாலும் நோய்வாய்ப்பட்டவர்களாகியோ குடும்பத்துக்கங்களாலோ மனமொடுங்கி விடுகிறார்கள். பர்த்ருஹரி என்ற ஒரு பெரியார் வைராக்ய சதகத்தில் சொன்ன ஒரு சுலோகம் என் மனதின் முன் வந்து நிற்கின்றது.

निवृत्ता भोगेच्छा पुरुषबहुमानोपि गलितः
समानास्स्वर्याताः सपदि सुहृदो जीवितसमाः ।
शनैर्यष्ट्युत्थानं घनतिमिररुद्धे च नयने
अहो मूढः कायस्तदपि मरणापायचकितः ॥

சில வருஷங்களுக்குமுன் நகைச்சுவை நிபுணர் எழுதிய ஒருநூலில் தொழிலிலிருந்து ஒழிவடைந்தவர்களைப் பற்றி அவர்கூறியதை நான் படிக்க நேர்ந்தது.

ஒருமுதலாளி சிறுவர்களுக்கு தொழில் பழக்கிக்கொடுப்பதற்காக, தான் தொழிலிலிருந்து விலகி ஒழிவடைந்து சுகவாழ்வாக இருக்க விரும்பினாராம். ஆனால் பழைய வாசனையின் பலத்தால் அடிக்கடி ஆலைக்கு வருவார். தன்னுடைய பழைய நாற்காலியில் உட்காருவார். சிற்சில சமயங்களில் பழைய கணக்குகளைப் பார்ப்பதுமுண்டு. ஒரு தடவை நீலகிரிக்குப் போனார். ஆனால் அந்த ஊரில் உள்ள குளிர் பிடிக்கவில்லை. க்ஷேத்திரங்களைப் பார்க்கச்சென்றார். அவைகளில் உள்ள வெப்பம் பிடிக்கவில்லை. அவைகள் நாகரீக நிலையங்கள் அல்ல என்று தோன்றியதால் அவ்விடம் செல்வதையும் விட்டு விட்டார். முடிவில் விட்ட தொழிலுக்கே திரும்பி வந்தார். முன் நிலையைக் காட்டிலும் தொழிலில் அதிகமாக ஈடுப்பட்டு பாக்கி வாழ்நாளை அதற்கு ஒப்படைத்து முடிவில் உயிர் நீத்தார்.

"Otion cum dignitate" என்பது லத்தீன் பாஷைப் பழமொழி. அதன் பொருள் 'ஒழிவும் கௌரவமும்'. ஒழிவடைந்து சுகவாழ்வாக வாழ்வது என்று அதன் அர்த்தம். மில்டன் என்ற மகா கவி

"Add to these retired leisure
That in trim gardens takes his
pleasure"

என்று கூறுகின்றார். அவருடைய எண்ணம், ஒருவன் ஒழிவடைந்தபிறகு தோட்டம்போட்டுப் பூஞ்செடிகளில் பூக்களும் மரங்களில் கனிகளும் மிளிர்வதைப்பார்த்துக் களித்தல் உயர்ந்தது என்பது தான். எனக்கு இதுமிகவும் அழகான எண்ணம் என்றுதான் தோன்றுகின்றது. வானில் ஒளி நிலையங்களான நக்ஷத்திரங்களும் பூமியில் விசித்திரமான வர்ண முடைய மலர்களும் இயற்கை ஆச்சரியங்களுக்

குள் பரமாச்சரியம். சிலர் உபகாரச் சம்பளம் பெற்றோ சேமித்துவைத்த பணத்தின் வருவாயைக்கொண்டோ குழந்தைகளுடன் வேடிக்கையாக விளையாடிக் கொண்டே இன்பமாகக் காலத்தைக் கழிக்க விருப்புகிறார்கள். Gladstone என்ற பெரிய மந்திரியைக்காண ஒருவர் சென்ற பொழுது அவர் பேரன் அவர் முதுகில் எறிக் குதிரை சவாரிசெய்ய அவர் குதிரைமாதிரி ஃகைகள் கால்களின் மேல் ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டு வியப்படைந்தாராம். இன்னும் சிலர் கிராமத்திற்குச் சென்று அங்கே அதை உயிர்ப்பிக்கவேணும் என்ற ஆசைஉள்ளவர்கள். சிலர் பட்டணங்களில் வீட்டைக் கட்டிப் பேசும் படக்காட்சிகள் ஆடல் பாடல் முதலிய விநோதங்களைப் பார்த்துக்கொண்டு அழகுப் பிரபஞ்சம் நடுவில் காலங்கழிக்க விருப்பமுள்ளவர்கள். வேறு சிலர் தேசத்திற்கோ சமூகத்திற்கோ சேவை செய்வதிலேயே ஈடுபட்டு வேலையைவிட்டு நீங்கி ஒழிவடைந்த காலத்தைச் செலவழிக்க விருப்பமுள்ளவர்கள். சிலர் பூஜை, பாராயணம், ஜபம், தியானம் முதலிய துறைகளில் இறங்க ஆசைப்படுகிறார்கள். சிலர் புண்ணிய ஸ்தலங்களை நாடி குமரி முதல் பதரி வரையில் போக விரும்புகிறார்கள். சிலருக்கு பூலோகம்முழுவதும் சுற்றுப்பிரயாணம்செய்ய விருப்பம். சிலர் வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்ற உயர்ந்த வழிகளில் செல்ல விரும்புகிறார்கள். எனக்கு மிகவும் மனக்களிப்பை யளித்தது சகுந்தலா நாடகத்தில் கண்வ ரிஷி சகுந்தலைக்கு உரைத்தது. துஷ்யந்தனுடைய அரண்மனைக்குச் செல்லும் பொழுது அவள் தன்னை வளர்த்த அருமைத்தந்தையான கண்வரைக் கேட்கிறாள், "நான் எப்பொழுது இந்த ஆசிரமத்திற்கு வருவதப்பா?" என்று. அவர் அதற்குப்பதில் உரைத்தது:

भूत्वा चिराय चतुरन्तमही सपत्नी
दौष्यन्ति मप्रतिरथं तनये निवेश्य ।
भर्त्रा तदर्पित कुटुम्बभरेण सार्धं
शान्ते करिष्यसि पदं पुनराश्रमेस्मिन् ॥

(வெகுகாலம் கடல் சூழ்ந்த உலகை ஆண்டு உன் மகனைச் சிங்காதனத்தில் அமர்த்தி அவனை பூபாரம் தாங்கச் செய்து உன் கணவனுடன் இந்த ஆசிரமத்திற்கு வருவாய்)

எந்த வழிசென்றாலும் தத்துவமறிந்து அமைதி அடைந்து சுயநலமற்றுப்பிறர் நலமறிந்து மிஞ்சிய நாட்களைத்தூயவாழ்வாகக் கடவுளுக்கு ஒப்படைத்து யமன் வரவை பயமற்று எதிர் பார்க்கவேணும்.

कृतकृत्याः प्रतीक्षन्ते मृत्युं प्रियमिवातिथिम् ।

உலகக் கடமைகளை நன்கு நிறைவேற்றி அவைகள் நன்றாக, சீர்கெடாமல் நடக்க ஏற்பாடு செய்து ஒழிவடைந்து அலட்டிக்கொள்ளாமல் சுக வாழ்வாக இயற்கை அழகை சாந்தமாக அநுபவித்து சிறுவர்கள் சிறுமிகளுடன் விளையாட்டாக இருந்து ஆசைகளை நீக்கி அழகுணர்ச்சியிலும் கலை அநுபவங்களிலும் புண்ணிய கார்யங்களிலும் தேச சேவைகளிலும் ஈடுபட்டு அன்பாக ஆனந்தமாக இருந்து தெய்வ நூல்களை நன்கு கற்று அருள்பெற்று யமனை அன்பனாகக் கருதி உலகத்தை விட்டு நீங்க பயமற்றுக்கடவுள் திருவடிகளைத் தஞ்சமென்று அடைதல்தான் ஷஷ்டியப்தபூர்த்தியின் வெற்றி என்று நான் கருதுகிறேன்.

குழந்தையின் புலம்பல்

ஜயலக்ஷ்மி ஆர் ஸ்ரீநிவாசன்

தாயார் பரிவுடன் பரிமாறினாள். அந்த அமிருதமயமான போஜனத்தை உண்டு தந்தையும் மகளும் கை அலம்பிக் கொண்டனர். தகப்பனார் உடுப்பு மாற்றிக்கொண்டு கச்சேரிக்குக் கிளம்பினார். புத்திரி தனது சின்னஞ் சிறு கையில் பலகை (சிலேட்) ஒன்றையும் உடைந்து போன பலப்பத்துண்டு ஒன்றையும் எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டாள். தாய் பூமா, கொல்லையில் பூத்திருந்த புஷ்பங்களை அவசர அவசரமாகப் பறித்து வந்து அழகாக திண்டு தொடுத்து அருமைப்புதல்வியின் நீண்ட அளகபாரத்தில் அன்புடன் சூட்டி அழகு பார்த்தாள்.

அப்பொழுது அச்சிறுமி 'அப்பா, இன்றைக்குப் பொம்மை வாங்குவதற்குக் காசு கொண்டு வருகிறாயா?' என்று கேட்டவாறு தகப்பனாரின் காலைப் போய்க் கட்டிக்கொண்டாள்.

தகப்பனார் 'ஊம்........ம்' என்றார். சிறுமியின் முகம் மலர்ந்தது. ஆனந்த மிகுதியால் அன்னையிடம் குதித்தோடிச் சென்று 'அம்மா! அப்பா இன்றைக்குகாசு கொண்டு வருகிறாராம். நான் இந்தத் தடவை நிறையபடிகள் கொலுவைக்கப் போகிறேன். என் பள்ளிக்கூடப் பெண்கள் அனைவரையும் ஆரத்திக்கு அழைக்கப் போகிறேன். தினம் ஒரு விதப் பக்ஷணம் வெற்றிலைப்பாக்கில் வைத்துக்கொடுக்க, செய்து கொடு அம்மா' என்று மழலைச் சொற்களில் பொழிந்து கொட்டினாள்.

பூமாவும் 'ஆகட்டும், ஆகட்டும். பள்ளிக்கூடத்திற்கு நாழிகையாய்விட்டது. புறப்படுடாம்மா' என்று தன் செல்வியை உச்சி மோர்ந்து முத்தமிட்டு அனுப்பினாள்.

பாலகியாகிய பிரேமகுமாரி மான் குட்டிபோல் துள்ளிக்குதித்தவாறு பள்ளிக்கூடத்திற்குப் போகும் வழி நெடுக சிநேகிதிகளிடத்தில் "இந்தத் தடவை நான் நிறையப்படிகள் பொம்மை வைக்கப்போகிறேன். உங்களையெல்லாம் தினம் மஞ்சள் குங்குமத்திற்கு அழைக்கப் போகிறேன். எங்கம்மா தினம் ஒருவித வாகினம் தயாரித்துக் கொடுக்கப் போகிறாளாம்." என்றெல்லாம் பெருமையடித்துக்கொண்டாள். அன்று முழுவதும் அக்குழந்தை ஒரே குதூகலத்திலும், கொம்மாளத்திலும் மூழ்கிக்கிடந்தாள்.

நவராத்திரிப் பண்டிகை சமீபித்துவிட்டது. தெருக்களில் எங்கு பார்த்தாலும் பொம்மைகள் விற்பவர்களும், பொம்மைகளின் ரஸிகர்களான சின்னஞ்சிறு குழந்தைகளும் கூட்டம் கூடிக்கொண்டிருந்தனர். பிரேமா, பள்ளிக்கூடத்திற்கு அந்த எக்ஸ்டென்ஷன் (extension) கடைத்தெருவைத் தாண்டிக் கொண்டுதான் போகவேண்டும். பள்ளிக்கூடத்திற்குப் போகும் வழிநெடுகக் கடைத்தெருவின் கடைகள் பூராவும் கண்ணைப் பறிக்கும் பலவித வர்ண வேறுபாடுகளுள்ள அழகிய பொம்மைகளால் குவிந்துகிடக்கும். கோவர்த்தன கிரிதரன், வேணுகோபாலன், ஜலக்கிரீடை, தசாவதாரம், ஸ்ரீ ராம பட்டாபிஷேகம், மேளசெட், பேண்டுசெட், போஜனசெட், கலியாணசெட், ஸ்ரீகிருஷ்ணன் தாலாட்டுசெட் என்று எவ்வளவோவிதப் பொம்மைகள் காக்ஷியளிக்கும். பிரேமாவும் அவள் கூட்டாளிகளும் பள்ளிக்

கூடத்திற்குச் செல்லும் பொழுதும், அங்கிருந்து திரும்பும்பொழுதும் இந்தக் கடைகளில்நின்றுஒன்ருென்ருய்ப்பார்த்த வாறு வீடுதிரும்புவது வழக்கம். பிரேமாவின் நேசிகள் ஒவ்வொருவரும் 'எங்கள் அகத்தில் இந்தத் தடவை முப்பது படிகள் அடுக்கப்போகிருர்கள்,' 'எங்கள் வீட்டில் ஐம்பது படிகள் ஜோடிக்கப் போகிருர்கள்,' 'எங்கள் வீட்டிலே இந்தத்தடவை நூறு ரூபாய்களுக்குப் புதுசாகப் பொம்மைகள் வாங்கி இருக்கிருர்கள்,' 'எங்கள் வீட்டில் 'லால்பார்க்' 'பீபல்ஸ் பார்க்' 'குன்று' 'கோவில்' 'குளம்' 'வயல்' 'கிராமம்' எல்லாம் ஜோடிக்கப் போகிரேும்' என்றும் பெருமை யடித்துக் கொள்வார்கள். மாதம் ஐநூறு, ஆயிரம் கணக்கில் சம்பாதிப்பவர்களின் செல்விகளான அந்தச் சிறுமிகளின் டாம்பீக வார்த்தைகளைச் செவியுற்று, மாதா மாதாம் இருபது ரூபாய்கள் சம்பளம் வாங்கிவரும் ஏழை குமாஸ்தாவின் புதல்வியான பிரேமகுமாரியின் உள்ளம் கலங்கும். தான் இந்தத்தடவை எப்படியாவது செய்து கடைசிப் பக்ஷம் எட்டுப்படிகளாவது கொலு அடுக்க வேண்டுமென நிச்சயித்துக்கொண்டாள் அந்த இளம் குழந்தை. அதே போல் தினந்தோறும் தாயாரிடத்தில் வந்து பொம்மைகள் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று நச்சரிப்பாள்.

அந்த ஏழைத்தாய்தான் என்ன செய்வாள்? பாவம்! உபாயமாக தகப்பனுரைக் காண்பித்துக் கொடுத்து விட்டாள். பிரேமாவிடமிருந்த பொம்மைகள் எது வென்ருல் கைகால்கள் பிய்ந்து போன 'சில்லலாயிட்' பொம்மையொன்று, ஐந்தாறு பிய்ந்துபோன அட்டை சோப்புப் பெட்டிகள், ஒரு பிடி உடைந்துபோன கண்ணுடி வளையல் துண்டுகள், சங்கராந்திபண்டிகையின்போது ஒன்றிரண்டு கன்னட தேசத்து மாமிகள் எள்ளுடன் கூடக்கொண்டுவந்து வாகினம் கொடுத்த சுண்ணும்பு தடவிய சிறிய மண் செப்புகள் சில, கிளிஞ்சல்கள் இவ்வளவுதான். இவைகளை மட்டும் கொலு வைத்தால் இரண்டுபடிகளைக்கூட நிறப்ப முடியாதே. கூடக்கொஞ்சம் நல்ல பொம்மைகளை வாங்கிவைக்க வேண்டுமென்று அந்தக் குழந்தைக்கு ஆசை. தாயாரின் உபதேசத்தைப்போல் தகப்பனுரிடம் வந்து,

"அப்பா, எனக்குப் பொம்மை வேண்டுமே, வாங்கித்தரையா?" என்றுக் கேட்டாள் பிரமோ.

"ஆகட்டும் அம்மா, பொம்மை என்னதிற்கு? உன்னிடம் தான் இருக்கே?"

"உ...ஹூ-ம்....ம். இதெல்லாம் நன்ருயில்லே. கடைத்தெருவில் நல்ல நல்ல பொம்மைகள் வந்திருக்கு. அவைகள் வேண்டும் எனக்கு, கொலு வைப்பதற்கு."

"அவைகளை வாங்க வேண்டுமென்ருல் நிரம்பக் காசு வேண்டுமே!"

"ஆபீஸுலேர்ந்து கொண்டுவா"

"ஆகட்டும்" என்று பாஸ்கரன் கச்சேரிக்குச் சென்ருன். அன்றெல்லாம் பிரேமாவிற்கு விளையாட்டோவேடிக்கையோ ஒன்றும் பிடிக்கவில்லை பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவள் சடுதியில் கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு 'அம்மா நாளைக்கே பிடித்து பள்ளிக்கூடம் இல்லே. கொலுப்பண்டிகைக்காக லீவு விட்டுட்டா' என்று தாயாரிடம் குதித்துக் கொண்டு வந்தாள். பூமா, 'வாடாப்பா. இந்தா, இந்த வாழைப்பழத்தைச் சாப்பிட்டுவிட்டு விளையாடப்போ' என்று ஒரு வாழைப்பழத்தைக் குழந்தையின் கையில் கொடுத்தாள்.

பிரேமா "போம்மா, எனக்கு இது வேண்டாம் வேறே நல்ல பக்ஷணம் வேண்டும். காப்பி தரையா?" என்ருள்.

"காப்பிப்பொடியே வீட்டில் இல்லையேடி கண்ணு! அப்பாவுக்குக்கூட காப்பி போடலையே நான்" என்று கண்கலங்கினுள் பூமா.

"இல்லாவிட்டால் போறதுபோ. நான் அப்பாவரானோ பார்க்கிறேன்" என்று ஒரே ஓட்டமாய் வாசலில்போய் நின்று அப்பா வரவை ஆவலுடன் எதிர்பார்த்தவாறு நின்றிருந்தாள். அவளுடைய நேசிகள்வந்து விளையாட வாவென்று கூப்பிட்டாலும்கூட "இல்லையம்மா.நான் இன்றைக்கு வரவில்லை" என்று மறுத்து விட்டாள். ஆனால் அப்பா வரவால் அவள் எதிர்பார்த்த பலன் கிடைக்க வில்லை.

மாதம் இருபதாம் தேதியன்று சம்பளம் எங்கே கிடைக்கப்போகிறது? தன் நண்பர்கள் சிலரிடம் ஐந்து ரூபாய்கள் கடன் கொடுக்குமாறுகெஞ்சிக்கூத்தாடினான் பாஸ்கரன். கடன் கொடுப்பார் யார்? ஒன்றிரண்டுபேர் நாளைக்குப்பார்ப்போம் என்றனர். மற்றவர்கள் கையை விரித்துவிட்டனர். தன் ஏக புதல்வி, தன் கண்மணி, தன் அகத்துக் குத்துவிளக்கு, தன் குலத்தின் திலகமாகப் போற்றி வரும் தவப்புதல்வியின் இந்த ஆசையைத் தன்னால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டதே என்று ஏங்கிய வண்ணம் முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு வீடுவந்து சேர்ந்தான் பாஸ்கரன். ஆவலே உருவெடுத்தாற்போல் நின்ற அந்தச் சின்னஞ்சிறு அழகி தன் தந்தையின் உல்லாசமற்ற பதிலைக் கேட்டு மனம் புழுங்கினாள். ஆனால் மறுநாள் அப்பா கட்டாயம் காசு கொண்டு வருவார் என்று மனதில் நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு விளையாடச் சென்றாள்.

மறுநாளும் முந்திய தினத்தைப் போலவே தகப்பனாரின் வரவை எதிர்பார்த்தவண்ணமிருந்தாள் சிறுமி. மறுநாளும் பாஸ்கரன் தன் நேயர்களனைவரையும் மிகவும் உருக்கமாக வேண்டினான். ஒருவன் நான்கணா, ஒருவன் இரண்டணா, ஒருவன் ஐந்தணா வீதம் கொடுத்தனர். சிலர் கையை விரித்துவிட்டனர். அப்படியும் இப்படியுமாக பாஸ்கரனின் கையில் தன், மற்றும் தன்காதலி பூமாவின் அன்பு விருந்தில் பழுத்த இனிப்பு நிறைந்த பழமாகிய அருந்தவப் புதல்விக்காக சிரமப்பட்டு சில்லறை ரூபாயாக மூன்று ரூபாய்களைச் சேகரித்துக்கொண்டு அதிக ஆனந்தத்துடன் வீடு திரும்பினான்.

குழந்தையை அழைத்துக் கொண்டு கடைக்குப்போய் அவளுக்குப்பிரியமான பொம்மைகளை அவளையே பொறுக்கி எடுத்துக் கொள்ளும்படிச் சொன்னால், அப்பொழுது அவளுடைய அழகிய வதனம் மலர்ந்துபோய் சிரிப்புடன்கூடி எவ்வளவு அழகாகவிளங்குமென்று எண்ணி மனம் பூரித்தவாறு வீடுவந்து சேர்ந்தான்.

வீட்டு வாசற்கதவருகிலேயே ஏங்கி நின்றிருந்த குழந்தையை பாஸ்கரன் ஆனந்தமாக வாரி எடுத்து முத்தமிட்டு, பொம்மைக் கடைக்கு அழைத்துச்சென்றான். அவளுக்கு வேண்டிய பொம்மைகளைப்பொறுக்கி எடுத்துக்கொள்ளும்படி சொன்ன பொழுது பிரேமாவின் விழிகள் ஆனந்த மிகுதியால் ஒளிநிறைந்து குதித்து விளையாடின. மிகவும் பரபரப்புடன் பொம்மைகளைப் பொறுக்கி வைத்தாள். தன் நயனங்களிரண்டையும் இழந்து அகஸ்மாத்தாய் மறுபடியும் பார்வையைப் பெற்ற குருடனுக்குண்டாகும் ஆனந்தத்தைக்காட்டிலும் பதின்மடங்கு அதிகமாகவே பிரேமா அச்சமயம் மகிழ்வடைந்தாள். அவளுடைய ஆனந்தப் பூரிப்பைக்கண்டு பாஸ்கரன் தான் ஐ.ஸி.எஸ்ஸோ, எப். ஸி. எஸ்ஸோ ஏதோ ஒரு பெரிய போட்டிப் பரீக்ஷையில் தேர்ந்து விட்ட மாணவனைப்போல் ஆனந்தமடைந்தான். தந்தை செல்வி இருவரும் ஆனந்த மிகுதியால் தாங்கள் தேவலோகத்தில் இருப்பதாக உணர்ந்து மெய்மறந்தனர்.

கடையில் எள்ளுப் போட்டால் கீழே விழமுடியாதளவு ஜனத்திரள். கடைக்காரன் பணம் கேட்டான். பாஸ்கரன் தன் ஜோபியிலிருந்த சில்லறைகளனைத்தையும் எடுத்துக் குவித்துக்கொண்டு எண்ணத் தொடங்கினான். அய்யோ! என்னே இவ்வுலகம்! தேவலோகத்தில் நர்த்தனமாடிக்கொண்டிருந்த, தந்தையும் மகளும் திடீரென்று பாதாள உலகில்

தள்ளபட்டுப் பரிதவித்தனர். கடவுளே! அக் குழந்தையின் புலம்பலைக் கண்டு உன் மனம் உருகவில்லையா? தீனதயாளு! அந்த இளம்தளிர் இவ்வித சோகமடைய அவள் செய்த பாபம்தான் என்ன? விளக்கமாட்டாயா?

திடீரென்று பாஸ்கரன்பின்புறமிருந்து யாரோ கள்வன் ஒருவன் கையை நீட்டி சில்லரை அவ்வளவையும் 'சரே'லென்று வாரிக்கொண்டு விட்டான். அய்யோ! என்று பாஸ்கரன் வாய்விட்டு அலறினான். துக்கமிகுதியால் அவன் நெஞ்சு வரண்டது. தலை சுழன்றது. தலையை இரண்டு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். குழந்தைபிரேமா நொடிப் பொழுதில் விஷயத்தை அறிந்தவளாய் வாய்விட்டழுது புலம்பலானாள். குழந்தையின் புலம்பலையும் ஏழைத்தந்தையின் வருத்தத்தையும் கண்டு மனம் உருகின நல்ல மனிதர்கள் சிலர் கூட்டத்தைப் பிளந்துகொண்டு திருடனைத் தேட முயன்றனர். எவ்வளவு முயன்றும் பயனில்லாமல் போய் விட்டது. திருடனே தேடுபவர்களுடன் ஒருவனாகத் திருடனைத் தேடிக்கொண்டிருக்கும் பொழுது திருடனை எப்படிக் கண்டுகொள்வது? பிரேமா தன் சின்னஞ் சிறு இதயத்திலுண்டான சோக ரசத்தை அவ்வளவையும் வெளியில் கொட்டிக் கல்லும் கரையும்படிக்கு பரிதாபகரமாக அழலானாள். பாஸ்கரனும் குழந்தையுடன் குழந்தையாகக்கண்ணீர் உதிர்த்த வண்ணம் வீடு திரும்பலானான். அந்தக் குழந்தையின் புலம்பலைக் கண்டு அங்கு நிறைந்திருந்தவர்களின் நேத்திரங்களில், ஏன் மிகக் கல்நெஞ்சர்கள் உள்பட அனைவரின் நயனங்களிலும் கண்ணீர் ததும்பிற்று.

பிரேமகுமாரி அழுதழுது அலுப்புற்று தாயார் மடிமீது தலையை வைத்துக் கொண்டு சுருண்டு படுத்துக் கண் அயர்ந்தாள் அந்த ஏழைத்தாய்தகப்பனால் இந்த மனமுடைந்த குழந்தையைத் தேற்ற இயலாமல் போயிற்று.

வாசல்புறம் யாரோ சாமீ, சாமீ, என்று அழைத்தாற்போலிருக்கவே, பாஸ்கரன் போய் பார்க்கையில் கூப்பிட்டவரைக்காணோம். ஆனால் வாசற்படியண்டை பெரியதொரு கூடை வைக்கப்பட்டிருந்தது. அதைத் திறந்து பார்ப்பதா வேண்டாமா என்று வெகுவாய் யோஜித்த பின்னர் தம்பதிகளிருவரும் ஓர் முடிவுக்கு வந்து; கூடையைத் திறந்து பார்த்தனர்.

என்ன விந்தை! பிரேமகுமாரி பொம்மைக் கடையில் விலைக்கு வாங்கிக் கொள்ளவேண்டிப் பொறுக்கி எடுத்த பொம்மைகள் அனைத்தும் கூடையில் காக்ஷியளித்தன. அடடா! எல்லாம் கடவுளின் திருவருள்! கடைக்காரன் குழந்தையின் புலம்பலைக் கண்டு மனம் இளகினவனாய் இவைகளை அனுப்பி இருக்கக்கூடுமோ என்று பாஸ்கரனின் உள்ளத்தில் ஓர் யோஜனை தோன்றிற்று. உடனே கூடையின் சகிதமாகக் கடையை நோக்கிக் கிளம்பினான் அவன். கடைக்காரனைப் போய்க் கேட்டதற்கு அவன் "அதென்னமோ எனக்குத் தெரியாதுங்க சாமீ! நிமிஷத்திற்கு நூற்றுக்கணக்கானபேர் கடைக்குவந்து பொம்மை வாங்கிப் போறாங்க. நான் யார் என்று கண்டேன்! நான் மட்டும் அனுப்பலேங்க. அதுதான் என்னால் சொல்லமுடியுங்க" என்றான்.

ஆனால் பாஸ்கரனின் பணத்தைத் திருடிய அந்தப் பேர்வழியே குழந்தையின் புலம்பலைக் கண்ணுற்று மனம் இளகிக் குழந்தைக்கு வெகுமதியாகப் பொம்மைகளை வாங்கி வந்து கொடுத்திருக்கக் கூடுமோ?

ரண வைத்தியம்

டாக்டர், ஆர். கிருஷ்ணமூர்த்தி, எல். ஐ எம்.

மாமா: ஏண்டா ராமு, என்னமோ தர்ம வைத்தியசாலே வைத்திருக்கிறேன், அதற்கு மாதம் 5ரூ தர்மம் கொடுங்கள் என்று எழுதினுயே; ஒன்றையும் காணுேமே! ஒரு உரலும் கலுவமும் தானே இருக்கு?

ராமு: வைத்தியசாலே என்ருல் வேறு என்ன இருக்கும்?

மா: பேஷ்! ரொம்ப நன்ருக இருக்கிறது. எல்லாம் ஒரே எமாத்தல்தான் போலிருக்கு.

ரா: இல்லே, அதோ ஒரு தோட்டம் இருக்கு பார்த்தேளா? அதுதான் மருந்துசாலே, மிகவும் அபூர்வமாக இருக்கிற மருந்துகளெல்லாம் அங்கே வளர்க்கப்பட்டுஇருக்கின்றன. மற்றபடி சாமான்யமானதெல்லாம் இந்த ஊரிலேயே கிடைக்கும்.

மா: யாராவது வைத்தியத்திற்கு வராளா?

ரா: நன்ருக இருக்கிறது. தினப் 40பேருக்குக்குறையாமல் வருகிருர்கள். அவர்கள் எல்லாம் திருப்தியாகத்தான் போகிருர்கள்.

மா: நிஜமாகத்தானு? எனக்கு நம்பிக்கை இல்லேயே.

ரா: வேண்டுமானுல் ஒருமணி நேரம் இங்கே உட்கார்ந்து பாருங்கள். அதோ வருகிருனே அவன் கதையைச் சொல்லச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

"எண்டா பிச்சை, உனக்குக் காலிலே காயம் இருக்கே, அது எத்தனே நாளாக இருக்கு; என்ன வைத்தியம் செய்து கொண்டாய்; இப்பொழுது எப்படி இருக்கு சொல்லு பார்ப்போம்"

பிச்சை: ஒரு மாசம் இருக்கும், குளத்திலே வழுக்கி விட்டது. அந்தப் படித்துறையில் இடித்துக்கொண்டேன். காலிலே, முழங்காலுக்கும் கணுக்காலுக்கும் நடுவிலே காயம்பட்டது. 2 நாளேக்கெல்லாம் சீ பிடித்துவிட்டது. பிறகு ஒரு ஆஸ்பத்திரிக்குப்போய் கட்டுக் கட்டிக்கொண்டேன். அங்கே காத்துக்கொண்டு இருக்க முடியவில்லே. 2 மணி காக்கவேண்டியிருக்கிறது. ஒரே கூட்டம். எனக்கெல்லாம் தினம் தினம் வேலேசெய்தால்தானே சாப்பாடு? வீட்டிலே ஒரு கிழவி. என்ன செய்வது? கால் இருந்தபடி இருக்கட்டும் என்று நான் தினசரி வேலே செய்து வந்தேன். ரணம் அதிகமாகிவிட்டது. ஏதோ இந்த ஐயாதான் இப்பொழுது மருந்து போடுகிருர்கள் ரொம்பதேவலே. இங்கே-காத்துக்கொண்டு இருக்கவேண்டியது இல்லே பாருங்கள்!

மா: கேஸ் ரொம்ப பெரிய கேஸாச்சே? என்ன செய்தாய்? இதை Septic-case என்பார்களே.

ரா: சீ பிடித்ததெல்லாம் Septic தான். என்ன செய்தேன் என்பதைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அந்த விரணம் இங்கே வரும் போழுது அவனுக்கு நடக்கமுடியவில்லே. கால் வீங்கி இருந்தது. ரணத்திலே சீ மாதிரி ஜலம் வந்துகொண்டே இருந்தது. ஒரு துர் நாத்தமிருந்தது. ரணத்தின் ஓரங்களெல்லாம் வெளிப்பக்கம் வளர்ந்து இருந்தது.

மா: அப்படியானுல் துருசுபோட்டு அந்த ஓரத்திலே எல்லாம் தேய்ப்பார்

களே. Hydrogen per oxide போட்டு நன்ருகச் சுத்தம் செய்யவேண்டுமே. ஆமாம்; Iodine போடக்கூடாது?

ரா: நீங்கள் சொல்லுவது சரிதான். ஏதோ ரொம்ப மருந்து பேர்களெல்லாம் தெரிந்துவைத்து இருக்கிறீர்கள். ஆனல் அவைகளெல்லாம் இங்கே உபயோகப் படாது. முதலாவது கிடைக்காது; இரண்டாவது அதிகவிலை.

மா: அப்பொழுது என்ன தான் பண்ணினுய் ?

ரா: துருசுக்குச் சமானமாக நம்ப மருந்துகளிலே உள்ளது வெள்ளைப் பூண்டு. ½தோலா பூண்டு எடுத்து வெய்யிலில் நன்ருக உலர்த்தி ¼சேர் விளக்கெண்ணெயில் போட்டு காய்ச்ச வேண்டியது. பூண்டு நன்ருக முறுக காயவேண்டியது. பிறகு எண்ணெயை வடிக்கட்டி ஒரு செப்புப் பாத்திரத்தில் போட்டு வைத்துக்கொள்ள வேண்டும். அந்த எண்ணெயைத்தான் உபயோகிக்க வேண்டும். முதலில் அந்த ரணத்தைக் கழுவவேண்டும். அதற்கு ஒரு கழாயம் தயாரிக்கவேண்டும். ஒரு தோலா கடுக்காய்தோல், ஒரு தோலா நெல்லிக்காய் தோல், ஒரு தோலா தானிக்காய்தோல் இவைகளை 2சேர் ஜலத்தில் போட்டு ஒரு சட்டியில்வைத்து நன்ருகக் கொதிக்கக் வைக்க வேண்டும். பிறகு வடிக்கட்டி இளம்சூடாக இருக்கும்பொழுது அதை விட்டு அந்த ரணத்தை நன்ருகக் கழுவி அந்தக் கழாயத்திலேயே நினைத்துப் பிழிந்த ஒரு சிறு துணியினல் நன்ருக ஒத்தித் துடைத்துவிட்டு ஒரு உலர்ந்த துணியைப் பூண்டுபோட்டுக் காய்ச்சின விளக்கெண்ணெயில் நினைத்து விரணத் தின் பேரில் போட்டுக் கொஞ்சம் பஞ்சு வைத்து ஒருதுணியால் கட்டவேண்டும். இவ்விதம் 4நாள்தான் நான்கட்டினேன். உடனே ஓரம் நன்ருகக்கரைந்து நடுவில் இருந்த பள்ளம் தூந்து சீ யாதிரி இருந்த தெல்லாம் போய்விட்டது. அதன் பிறகு அந்தப்பூண்டு எண்ணெயை நிறுத்திவிட்டு வெறும் விளக்கெண்ணெயைத்தான் உப யோகித்து வந்தேன். இப்பொழுது வடு கூட வந்துவிட்டது.

மா: சட்டியில் காய்ச்சினுயேகழாயம், அது அவ்வளவு சுத்தமாயிருக்காதே. ஒரு நல்ல பீங்கான் ஏதாவது வைத்துக் கொள்ளக் கூடாதா ? அதிலே எல்லாம் Bacteria—இருக்கும் என்பார்களே?

ரா: ஜலத்திலே எல்லாம் Bacteria இருக்கும். ஆனல் அந்த ஜலத்தைக் கொதிக்க வைக்கும் போது Bacteria எல்லாம் இறந்துவிடும். ஆனல் ஒன்று. கழாயம் அவ்வப்போதுதான் போட வேண்டும்.

மா: அது ரொம்ப சிலவாகுமே?

ரா: அதற்குத்தான் உங்கள் பணம் வேண்டி இருக்கிறது.

மா: நீ, மிகவும் கெட்டிக்காரன் தான். இருக்கிறதைவைத்து வைத்தியம் செய் கிருய். அந்தக்காய்கூட ஆளே கொண்டு வருவான்போல் இருக்கிறது.

ரா: ஒருவன் கொண்டு வருகிற சாமான் இன்னும் 10பேருக்குக் காணும். இந்த Certificate எனக்கு வேண்டாம். எவ்வளவு பணம் வெளியில் வரும் சொல்லுங்கள்.

மா: பணமா? யோசிப்போமே.

ரா: நல்ல யோசனை. இங்கே வர ஆள்களில் பாதி உங்க ஆள்தான். ஊரில் பாதி உங்க நிலமோ இல்லையோ? ஆள்க ளெல்லாம் நிற்காமல் ஒழுங்காய் வரு வான்கள்.

மா: மாசம் எவ்வளவு சிலவாகும் சொல்லு.

ரா: ரூ. 35 தான் ஆகும். நீங்கள் இன்னும் 10 நாளைக்குத்தான் இருக்கிறீர் களே. இங்கே வாருங்கள். மனதுகொஞ் சம் திருப்தி அடையட்டும். மாமா, நீங்கள்வேண்டின ஐயோடின் கேஸ் வருகிறது. அவன் கூட உங்க ஆள் தான். நேற்றுக் காலையில் வயலில்

வேலை செய்யும்போது காலை வெட்டிக் கொண்டு விட்டான். உடனே ஓடிவந் தான் ஒரே ரத்தத்தோடே.

மா. அவனா? நம்பசடையன் ஆச்சே; என்ன பண்ணினாய் சொல்லு. அது தான் ரொம்ப முக்கியம். இங்கே எல் லாம் அந்தமாதிரி கேஸ்தானே வரும்?

ரா: அவனையேதான் கேளுங்கள்.

ச: எஜமான்! எப்பவந்திங்க? அம்மா எல்லாம் சௌக்கியமா?

மா: உன் காலில் என்ன கட்டி இருக்கிறாயே?

ச: நேத்தி மத்தியானம் உங்க அரை வயல் அண்டை வெட்டிக் கொண்டு இருந்தேன். போன வருஷம் வெட்டின கருக மரத்தின் வேர் ஒண்ணு அப்படியே இருந்தது. அதிலே பட்டு மண்வெட்டி என் காலிலே பாஞ்சிட்டது. ஐயாதான் ஏதோவைச்சுக் கட்டினாங்க. இப்போ நல்லா ஆயிடுத்துங்க.

ரா: என்ன செய்தேன் என்பதைச் சொல்லுகிறேன் கேளுங்கள், நன்றாக ஒரு சொம்பு கிணற்று ஜலம் எடுத்து வடிக்கட்டி கொதிக்க வைத்தேன். அதிலே நாலு வேப்பிலையும் ¼ பலம் வேப்பம் பட்டையும் போட்டு அரை மணி கொதிக்க வைத்தேன். சுமாராக ஆறின உடன் வடிக்கட்டி, அவன் காயத்தை அலம்பினேன். பிறகு அந்த கழாயத்தில் நினைத்த ஒரு துணியால் நன்றாகத்துடைத்து அதன்பேரில் தும்பை இலை ஒரு பிடியை இடித்து அரைத்து வைத்துக் கட்டினேன். அநேகமாக இப்பொழுது பாதி ஆறி இருக்கும். பார்ப்போம். சடையா, எங்கே; கால் கட்டை அவிழ்த்துவிடு ....பேஷ்! நன்றாக ஆறிவிட்டதே! பார்த்தீர்களா மாமா என் முறைகளை? செலவு குறைவு; குணமும் சீக்கிரம்.

மா: ராமு, நான் ஏதோ நினைத்தேன். கிராமாந்தரங்களுக்கு ஏற்ற வைத்திய முறை இது தான். எனக்கு மிகவும் திருப் தியாக இருக்கிறது. நாளைக்கு இன்னும் கொஞ்சம் சாவதானமாக வருகிறேன்.

ரா: நல்லது. போய்வாருங்கள்.

அறிவிப்பு.

சந்தாதாரர்கள் விலாச மாற்றங்களை அவ்வப்போது பாரதமணி காரியாலயத் திற்கு அறிவித்துவிடக் கோருகிறோம்.

மானேஜர்.

லிங்க்யூர்

க்ஷயம்
இருமல்
ஆஸ்த்மா
ஈளை
தீரும்.

விலை ஒருமாத மருந்து ரூ. 5

கிடைக்குமிடம்:—

தி இண்டியன் இண்டஸ்ட்ரியல் கம்பெனி லிமிடெட்,
363, எஸ்பிளனேட், சென்னை.

தி யுனைடட் எல். ஐ. எம்ஸ்.
டிஸ்பென்சரிகள்.

1. 28, உஸ்மான் ரோட், தியாகராயநகர், சென்னை.
2. தெற்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னை.
3. பட்டமங்கலத்தெரு, மாயவரம்.
4. தெற்குவீதி, தஞ்சாவூர்.
5. ஆண்டார்வீதி, தெப்பக்குளம், திருச்சி.

வேப்பமரம்

ராமனாத சர்மா

நீம் கிராமங்களில் வந்தால், சாலைகளிலோ, தெருக்களிலோ, வீட்டின் முன் பக்கத்திலோ, பின் பக்கத்திலோ காணப்படும் மரங்களில் ஒன்று வேப்பமரம். பொதுவாக இதன் நிழல் வெகு குளுமையாக இருப்பதால்தான், சாலைகளில் இருபக்கங்களிலும்வைத்து வளர்க்கிறார்கள். இந்தக் காக்ஷியைக் காண வேண்டுபானால் புது டில்லியில் காணலாம். எல்லா சாலைகளிலும் நான்கு வரிசைகள் வேப்பமரம் வைத்துப் பயிராக்கப்பட்டு இருக்கின்றன. பொதுவாக அதன் உபயோகம் எல்லோரும் அறிந்ததுதான். ஆனால் அதன் உபயோகம் வைத்தியத்தில் என்ன என்பதைத் தெரிந்துகொள்வோம். அநேக உபயோகங்கள் இருந்த போதிலும் முக்கியமானவைகள்தான் சொல்லப்படும்.

கொழுந்து. வேப்பங் கொழுந்து குடலிலுள்ள கிருமிகளைக்கொன்றுவிடும். ஆகையால் மாதம் ஒரு முறையாவது வேப்பங் கொழுந்து சாப்பிட்டால் குடலில் உள்ள கிருமிகளினால் உண்டாகும் அநேக வியாதிகள் தீரும். சாப்பிடும் முறை: காலையில் வெறும் வயிற்றில் ஒரு பிடி வேப்பிலைக் கொழுந்துடன் 4 மிளகும், 10 உப்புக்கல்லுமாக வைத்து நன்றாக அம்மியில் அரைத்துச் சாப்பிட வேண்டும். முக்கியமாகக்குழந்தைகளுக்கு இது அவசியம். கண்டதைச்சாப்பிடும் குழந்தைகள் வயிற்றில் நாக்குப் பூச்சிகள் அதிகமாக உண்டாகும். அவைகளினால் திடீரென்று பேதி ஆகும்; இல்லாவிட்டால் மஞ்சள்காமாலை ஏற்படும். ஒன்றும் தெரியாதவர்கள் பயந்து விடுவார்கள். அந்த நாக்குப் பூச்சி, மேல் நோக்கிச்சென்று பித்தப்பையின் வாயை அடைத்துவிடும்.

இலை: ரத்த சுத்தி செய்யும் மருந்துகளில்ஒன்று. இதில் கந்தக சத்து இருப்பதாகச்சிலர் கூறுகிறார்கள்.

குழந்தைகளுக்கு அடிக்கடி வரும் கரப்பான் என்னும் சொரிசிரங்குகளுக்கு இது மிகக் கை கண்டது. வேப்பிலையுடன் சம எடை மஞ்சள் சேர்த்து நன்றாக அரைத்து, கொஞ்சம்சுடவைத்து பூசவும். இப்படி 5 அல்லது 6 நாட்கள் பூச கரப்பான் தீரும். இத்துடன் தினம் விளக்கெண்ணையோ அல்லது வேறு எதுவோ ஒருவேளை சரியாக வெளிக்குப் போக மருந்து கொடுக்கவும். அந்த சிரங்குகளில் சீ பிடித்து இருந்தால் வேப்பிலை மஞ்சளுடன் கொஞ்சம் நல்ல களிமண்ணையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பட்டை, வேர்: வேப்பம் பட்டை, வேர் இவைகள் ரத்த சுத்திசெய்யும் விஷயத்தில் மிகச்சிறந்தவை. நன்றாக முத்தின மரத்தின் பட்டையைக் கழாயம்போட்டுச் சாப்பிட மேகஊறல், கை கால்களில் நமைச்சல், சொறிந்தால் ரணமாவது, அதிலிருந்து ஜலம் வருவது தீரும்.

பருப்பு: வேப்பம் பருப்பை தலைவலி வந்தால் ஜலம்விட்டு இழைத்துப் பொட்டுகளில் போடலாம். வேப்பம் பருப்புடன், வெள்ளைமிளகு, கஸ்தூரி மஞ்சள், பாதாம்பருப்பு, கடுக்காய்தோல் முதலியவைகளைச்சமனாக அரைத்து, பசும்பாலுடன் கலந்து கொதிக்கவைத்துத் தலையில் தேய்த்து ஸ்னானம்செய்ய ஒரு பெரிய கல்பகமாக விளங்கும். அநேக சிரோ ரோகங்கள் தீரும்.

தொடர்ச்சி 182ம் பக்கம் பார்க்க.

மோர்

"ஸரஸி"

ராமச்சந்திர ஐயர் மிகவும் சங்கடத்துடன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். "ஏண்டா முத்துஸ்வாமி இன்னும் தயிர் வரவில்லை? எல்லாரும் இலையில் உட்கார்ந்து விட்டார்கள். இன்னும் தயிர்வரவில்லையே! போய் சமயல்காரன் சுப்பிரமணியனைக் கூப்பிடு" என்றார்.

முத்துஸ்வாமி சமயல்காரனை அழைத்து வருகிறான்.

சு: எஜமான்! தயிர் வந்து விட்டதா? பாக்கி எல்லாம் ரெடி. மோர் கரைக்க எல்லாம் தயாராக இருக்கிறது.

ரா: அதானே சங்கடம் இப்பொழுது. தயிர்க்காரப்பயல் ஒருவரும் வரவில்லையே. அட்வான்ஸ் வாங்கிப்போனதிலே குறைச்சல் இல்லை.

மு: ஒரு ஊரிலேயும் தயிர் கிடைக்கவில்லையாம். நம்ம தயிர்க்காரி காலையில் வெளியே போனவள் இன்னும் வீட்டுக்கே வரவில்லையாம். நாலா பக்கமும் இல்லை என்கிற பேச்சுத்தான்.

ரா: என்ன சுப்பிரமணியம்? இப்பொழுது என்ன செய்கிறது? மானம் போகும் போலிருக்கே. உங்கள்பேரைக் காப்பாற்றிக்கொள்ள முன் ஜாக்கிரதையாக ஒண்ணுக்கு நாலு லிஸ்ட் போடுகிறேளே. நேத்திக்கே தயிர் வாங்கி வைத்துக்கொள்ளக் கூடாதா?

சு: நேத்தி தயிர் மோர்க்குழம்புக்குத்தான் உதவும். மோருக்கு எஜமான் நல்ல தயிர் வரும் என்று சொன்னேளே என்று பார்த்தேன். என்னிடம் முதலிலேயே ஒப்பித்து இருந்தால் எல்லாம் ரெடியாக இருக்கும். இப்பவும் மோர் இல்லாவிட்டால் என்பேர்தானே கெடப்போகிறது? பெரிய இடத்துலே எல்லாம் அதிகமாச் சொன்னு சந்தேகம் வறது.

ரா: என்னடா என்னமோ ஓட ஓட விரட்டுகிறாய்? மோர் என்ன, செய்து கொண்டா வரமுடியும்? சாமர்த்தியம் இருந்தால் இப்பொழுதுதான் செய்து கொண்டு வா போ.

சு: எஜமான் கோபித்துக் கொள்ளாதேயுங்கள். எல்லாவற்றிற்கும் ரூ. 50 கொடுங்கள். எப்படியாவது—ஒரு மணியில் தயார் செய்து—இந்தப் பந்தியை கௌரவமாக எழுப்பிவிடுகிறேன்.

ரா: என்னடா? 10 அல்லது 15 ரூபாயில் நடக்கக் கூடிய காரியத்திற்கு சமயத்திலே ரூ. 50 வேண்டுமா? இப்படித்தான்-கமிஷன் வேலைபோல் இருக்கிறது.

சு: என்னமோ முடைக்கு உதவலாம் என்றால் சந்தேகப்படுகிறீர்கள். நான் வேலைக்காரன்தானே? மோர்வந்தால் போடுகிறேன். இல்லை என்றால் இரண்டாந்தரம் ரசமே போடுகிறேன்.

ரா: வேலைக்காரன்களே இப்படித்தான் மேலே மேலே பேசுகிறது. இந்தா ரூ. 50. காரியத்தைப்பார்.

சுப்பிரமணியன் பணத்தைப் பெற்றுக் கொண்டு காரியத்தை நன்றாகப் பார்த்தான். பிரம்ஹானந்தம் என்று சொல்லிக் கொண்டே எல்லாரும் 2, 3 தொன்னைகள் 'மோர்' குடித்தார்கள்.

எல்லோரும் ராமச்சந்திரனின் தாராள விருந்தையும் சுப்பிரமணியனின் சமையல் திறமையையும் புகழ்ந்தார்கள்.

சுப்பிரமணியனுக்குப் பணம் கொடுக்கும் கட்டம் பாக்கி. அம்மாளுடன் யோசிக்கிறார் ராமச்சந்திர ஐயர்.

மனை: அவன் கேட்கிறதுக்கு மேல் ஒரு 10 ரூ. கொடுத்து அனுப்புங்கள். திருப்தியாகப் போகட்டும். அவன் மோர் செய்த சிரமத்திற்கே எல்லா ரூபாயும்தகும்.

ரா: சாமானைக்கொட்டி இறைத்தது வேறு நஷ்டம். மோருக்காக ரூ. 50 வாங்கியிருக்கான். அதிலே எவ்வளவு கமிஷனே! இன்னும் வேறேயா கொடுக்கிறது?

மனே: ரூ. 50 என்னிடம்தான் கொடுத்திருக்கிருன். அங்கேயும் எடுத்து முழிங்கிவிடவில்லை.

ரா: மோருக்கு எப்படிப் பணம் கொடுத்தான்?

மனே: மோரு வாங்க வில்லை. இரண்டாம் பந்திக்கு உலை வைத்தான்; முதல் பந்திக்கு மோர் செய்தான்.

ரா: அப்படி என்ருல்?

மனே: கழி நீர்தான். எல்லாரும் மோர் என்று சாப்பிட்டாளே. மோருக்குச் செய்கிற பணிக்கு எல்லாம் செய்தான். 10 எலிமிச்சம்பழம் புழியவே ஒன்றும் தெரியவில்லை.

ரா: வாஸ்தவமாகவா? எல்லாரும் நன்ருக இருக்கு என்று நிறையச் சாப்பிட்டார்களே!

மனே: சமையல்காரன் சமயோஜித புத்தி, உங்களுக்கு ரொம்ப கௌரவம் கொடுத்தது.

குறிப்பு:—கழிவுநீர் என்று கேலி செய்யாதீர்கள். அது ஸர்வ விஷஹரம். தவிட்டில் இருக்கிற வைடமின் பூராவும் அதில் இருக்கிறது. கைக்குத்தல் அரிசிக்கு பிரசாரம் நடக்கும் காலத்தில் கழிவுநீரை மறந்துவிடக்கூடாது. மாடுகளுக்குத்தான் உபயோகம் என்று எண்ணுதீர்கள். மாடுபோல் உழைக்கும் எல்லாருக்கும் உபயோகம்தான். நேரில் சாப்பிட வெட்கமாக இருந்தால் மோருடன் கலந்து சாப்பிடலாம்.

180ம் பக்கத்தொடர்ச்சி.

எண்ணை: வேப்பெண்ணை இல்லாமல் குழந்தை வைத்தியமே கிடையாது. குழந்தைகளுக்கு அடிக்கடி மந்தமும், இழுப்பும் வருவது சகஜம். அப்பொழுது வேப்ப எண்ணையைக் காய்ச்சி, உடம்பு முழுவதும் தடவி, உள்ளுக்குப் ஒரு அவுன்ஸ் போட்டுவது வழக்கம். வேப்பெண்ணையுடன் கோழி முட்டையின் மஞ்சள் கருவை சேர்த்துக் காய்ச்சியும் உபயோகிப்பது அதிக பலன் தரும். பெரியோர்களுக்கு வரும், இழுப்புக்கும் இது உபயோகமாகும். அசுத்த விரணங்களுக்கும் காதிலிருந்து சீ வரும்பொழுதும் இதை உபயோகிக்கலாம்.

பக்தனுக்கு அழிவில்லை

"சிவவேலன்"

டி. வி. அருணாசலம், கொத்தவால்சாவடி, கடலூர்

பெருங்கூர் என்ற ஊரில் உலகநாதன் என்ற ஓர் உழவன் இருந்தான். அவனுக்கு நீண்ட காலம் புத்திரபாக்கியம் இல்லை. ஆகையால் ஏங்கினான். பல தருமங்கள் செய்துவந்தான். ஏழைகளுக்கு அன்னமிட்டான். ஊரில் உள்ள குழந்தைகளைத் தன்குழந்தைகளைப்போல் பாவித்து அவர்களிடம் அன்பாய் இருந்தான். இதன் பயனாய் உலகநாதன் கடவுள் கிருபையால் தன் ஐம்பதாவது வயதில் ஓர் ஆண் குழந்தைக்குத் தகப்பனானான்.

குழந்தையும் வெகு அழகாயிருந்தது. கம்பீரத் தோற்றத்தை உடையதாயிருந்தது. உலகநாதன் குழந்தைக்கு வேலன் எனப்பெயரிட்டான். குழந்தைப்பருவம் முடிந்து, பாலன் பத்து வயதை அடையும் தினம் தன் பெற்றோர்களை இழந்தான். பாவம் வேலன் என்ன செய்வான். அனாதைக்கு தெய்வமே துணை! அவன் உலகத்தாரால் வெறுக்கப்படுவது சகஜம். வேலன் மிகவும் கஷ்டப்படவேண்டியிருந்தது. இருந்தாலும் அவன் பக்திமான். மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்கள்பால் குழந்தைப்பருவம் முதல் அன்பும் பக்தியுமுடையவன். ஆகையால் சதா ஸ்வாமியை த்யானம் செய்து பரந்தாமன் திரு நாமத்தை உச்சரித்து வந்தான். சில சமயங்களில் தன் பசியையும் தூக்கத்தையும் மறந்து பரந்தாமனின் நாமத்தை உச்சரிப்பது வழக்கம். உலகத்தார் வேலனைப்பைத்தியம் என அழைக்கலானார்கள். அவனை கேலி செய்தார்கள். அந்தோ பாவம்! உலகத்தின் அறியாமை தான் என்ன! நாஸ்திகர்களுக்கு பக்தர்கள் பைத்தியமாய்த் தோன்றுகிறார்கள். வேலனின் நித்திய சீவனமே கஷ்டமாய் விட்டது. இருந்தாலும் பரந்தாமனை மறக்கவில்லை. சிறுகதைகளில் காளிதாசர் எப்படி காளி அருள் பெற்றார், எப்படி கவியானார் என்பதை வேலன்படித்தவன்; அதுவே அவனின் பக்திக்கு வித்தாக இருந்தது.

ஒரு நாள் வேலன் ஓர் கனவுகண்டான். ஓர் கிழவர் கனவில் தோன்றி "அப்பா, வேலா! நீ கவலைப்படாதே. பரந்தாமனைக் கைவிடாதே. அவரே உன் தாய்தந்தை. அவர் உன்னை காப்பாற்றுவார். தருமம்செய். தருமம் தலைகாக்கும்" எனக் கூறிமறைந்தார். அன்று முதல் வேலனுக்கு பக்தி அதிகரித்ததுக்கடவுளை சதா தொழுதான். தனக்குக்கிடைக்கும் ஆகாரத்தில் சிறிது பாகம் பசியென்று வருபவருக்குக்கொடுத்து மிகுதியை புசித்துவந்தான். சில சமயம் உடல் நலம், சுயநலம் பாராமல் தன் ஆகாரம் பூராவையும் பரந்தாமன் பெயர்சொல்லி யாசிப்பவருக்குக் கொடுத்து விட்டுத் தான் பட்டினிகிடப்பான்.

பக்தர்களைச் சோதிப்பது 'அவன்' தொழில் அல்லவா! ஓர் நாள் விடாது

மழை பெய்தது. குளிர் அதிகம். புயற் காற்று வீசும் வேகம் பயங்கரமாயிருந் தது. அன்று வேலனுக்கு ஆகாரம் கிடைக்கவில்லை. பரந்தாமனை தியானித் துக் கொண்டிருந்தான். அது சமயம் வேலனிடம் ஓர் கிழவர் வந்தார். தள் ளாத வயது. அவர் வேலனைப்பார்த்து "அப்பா, பசி காதையடைக்கிறது. புசிக்க சொல்ப ஆகாரம் கொடு" என யாசித்தார். பாவம் வேலன் என் செய் வான்? புழுவாய் துடித்தான். கடவுள் மேல் பாரம் சுமத்தி "ஐயனே நான் உம்மையே கதியென நம்பியுள்ளவன் இதுவும் உன்திருவிளையாடலோ?" எனக் கூறி ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த ஜலம் கொண்டுவந்து கிழவரிடம் கொடுத்தான் என்ன ஆச்சரியம்! ஜலம் பாலாகமாறி யது. வேலன் ஆனந்த பரவசனானான். பரந்தாமன் நாமத்தை உச்சரித்தான். கூத்தாடினான். கிழவர்மனம் குளிர்ந்தது. வேலனுக்கு அருள் செய்ய விரும்பினார். தன் சுயரூபத்தை வேலனுக்குக்காட்ட, சக்தி தேவியாருடன் சிவன் காட்சி அளித்தார். வேலனை நோக்கி "பக்தா! உன் பக்திக்கு மெச்சினோம். இனி நீ ஜலத்தைக் கொடுத்தாலும் அது அமிர்த மாகும். உலகத்தார் உன்னைப்புகழ்வார் கள். மாயை உன்னை அடையாது. தரு மத்தை நீ கைவிடாதே" எனக் கூறி வேலன் செவிகளில் ஏதோ உபதேசம் செய்து மறைந்தார்.

அது முதல் வேலன் தருமத்தைக் கருதி பசி என்ற ஏழைகளுக்கு ஜலத்தை ஓர் பாத்திரத்தில் கொடுக்க அது அமிர்த மாகமாறியது. பாமரஜனங்கள் அவனைப் புகழ்ந்தார்கள். பரந்தாமன் உபதேசம் பெற்ற வேலன் "சிவவேல்" என அழைக் கப்பட்டான். விவேகமடைந்து பக்திரச கீதங்கள் பல பாடி ஜனங்களுக்கு 'பக்தி' என்றால் என்ன, பக்தனுக்கு அழிவு இல்லை என்பதைப் பற்றி விஸ்தாரமாக எடுத்துக்கூறினான். ஊர்ஊராகச்சென்று "கடவுள்பக்தி"யைப்பற்றி பல உபன்யா சங்கள் செய்து கடைசியில் சிவானந்த மதுவை உண்ண சிவனடியடைந்தான்.

சீலமும் கல்வி கலையறிவும் நல்லுணர்ச் சியும் அழகுபடக்கலந்து நிற்பது பண் பாடு என்றால், அது எல்லா நாட்டின ருக்கும் ஒன்றுதானே எனத் தோற்ற லாம். அப்படியல்ல. கண்ணும் மூக்கும் முகமும் மற்ற அங்கங்களும் அந்தமாகப் பொருந்திநிற்பது அழகு என்றாலும், பிராணி உலகத்திலும் மக்களுலகத்திலும் எத்தனை வகை வகையான அழகைப் பார்க்கிறோம்? இவ்வாறே பலநாடுகளின் பலவிதப் பண்பாடுகளும். உலகமெல் லாம் ஒன்றுளன்பது உண்மை; அழகெல் லாம் ஒன்றுளன்பது உண்மை. ஆயினும், வேறுபாடுகளே உலகத்தின் பேரழகு.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்
—குமரி மலர்.

லண்டன் நகரத்தைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் மூடு பனிதான் ஞாப கத்திற்கு வருகிறது. மூடுபனியில் மிக அருகில் வருபவரையும் தெரியாது. ஆறடி தூரத்தில் வருபவர்களைக்கூட ஆங்கிலேயர்கள் தெரிந்துகொள்ள முடி யாமலிருக்கும் பொழுது, ஆறுயிரம்மைல் களுக்கப்பாலுள்ள நமது விஷயங்களை அவர்கள் தெரிந்து கொள்ள வில்லை யென்று குறைகூறுவது நியாயமாகுமா?

ஏ. கே. செட்டியார்—குமரி மலர்.

இராமகிருஷ்ண பரஹம்ஸ தேவர்

எம். எஸ். இராமஸ்வாமி, புதுடில்லி.

1833-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி ஹூக்ளி ஜில்லாவில் உள்ள காமர் புக்கூர் என்ற குக்கிராமந்தனிலே ஞானச்சுடரால் அறியாமை என்ற இருளைப்போக்க ஸ்ரீ இராமகிருஷ்ணபரஹம்ஸ தேவர் அவதரித்தார். இவர் ஒரு ஏழைப் பிராமண குலத்தைச் சேர்ந்தவர். இவருடைய தாய் தந்தையர்கள் ஏழ்மைவாய்ப்பட்டு உழன்றும் நற்குணங்களே உருவெடுத்தவர்கள். இந் நற்குணங்களைத்தும் இராமகிருஷ்ணரிடத்தில் பிரதிபலித்ததில் ஆச்சர்யமில்லை.

இராமகிருஷ்ணர் சிறுவயதிலேயே ஞானக் குழந்தையாகக் கருதப்பட்டார். தன் பூர்வஜன்ம இரகசியங்களையும், தான் எதற்காகப் பூமியில் பிறந்திருக்கிறோமென்பதையும் அவர் அறிந்திருந்தார். சிறு வயதிலேயே இவருடைய தந்தையார் இவர்களெல்லோரையும் தவிக்கவிட்டு இவ்வுலகினின்றும் விடைபெற்றுச் சென்றார். இதற்குப் பிறகு இராமகிருஷ்ணர் தன் தமையனுடன் பள்ளி சென்றார். ஞான மார்க்கத்திலே சென்ற இவர்மனம், படிப்பு விஷயங்களில் செல்லவில்லை. பள்ளியைவிட்டு விலகித் தன் ஏழைக் குடும்பத்தைக் காப்பதற்கு வேண்டிய வழிதேடிப் புறப்படலானார்.

இத்தகைய நோக்கததுடன் இராமகிருஷ்ணர் தன் சொந்த கிராமமாகிய காமர்புக்கூரை விட்டுக் கால் நடையாகவே தக்ஷிணேசுவரம் என்ற இடத்தை அடைந்து அங்குள்ள காளி கோவிலுக்குப் பூசாரியானார். காலை மாலை வேளைகளில் காளிக்கு பூஜை, நைவேத்தியம் முதலியன செய்ய வேண்டியது இவருடைய வேலை. இவைகளை இவர் தவறாமல் செய்துவந்தாராயினும் வெறும் பூஜைகளால் மட்டும் இவர் மனம் திருப்தியடையவில்லை. ஆங்கே கல்லுருவாய் எழுந்தருளியிருக்கும் காளி தேவிக்கு உண்மையில் அழியா ஆன்மா என்று ஒன்று இருக்கிறதா? மற்றும் உண்மை காளிஸ்வரூபம் அக்கல்லுருவில் பிரதிபிம்பிக்கின்றதா என்பன போன்ற கேள்விகள் இவர் மனத்திடையே உதித்தன. இத் தீர்மானத்துடன் கடவுளின் சுயரூபத்தை எப்படியாவது நேரில் பார்க்கவேண்டுமென்று உறுதிகொண்டு அதற்குரிய வழிகளைத் தேடலானார். மற்றெதைப்பற்றியும் இவர் கவலை கொண்டதாகத் தெரியவில்லை.

இதனால் தன்னையும்மறந்தார்; தன்னைச் சூழ்ந்துள்ள யாவற்றையும் மறந்தார்; மற்றெல்லாவற்றையும் மறந்தார்; காளி தேவிக்குச் செய்யவேண்டிய நித்ய வழிபாடுகளையும் மறந்தாரென்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ஆக, கடவுளைக் காண ஆவல் அதிகரிக்கவே காளி கோவில் பூசாரி வேலையை விட்டு அக்கோவிலுக்கருகேயுள்ள காட்டிற்குச் சென்று ஆகாரம் தண்ணீர் முதலியவைகளை மறந்து தியானத்தில் ஆழ்ந்தார்.

இவருடைய நடவடிக்கைகளைக் கண்ட ஜனங்கள் 'இவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ' என்று எண்ணத் தொடங்கினர். பேதைகள் தானே! இவர் கடவுளைப்பற்றி அநேக அதிசயக் கனவுகள் கண்டார். ஞானத்தைப் போதிக்க இவருக்குத் தகுந்த குரு ஒருவரும் இல்லை. இதைக் குறித்து இவர் வருந்தினார். இச்சமயத்தில்தான் காளிதேவி இவர்மேல் இரக்கங்கொண்டு சந்நியாசினியாக அவதரித்தாள் என்று சொல்லிக்கொண்டார்கள். அதாவது அச்சமயத்தில்தான் சந்நியாசினி ஒருவள் தக்ஷிணேஸ்வரத்திற்கு வந்தாள். இராமகிருஷ்ணரைப்பற்றிக்கேட்ட அவள் இவரிடம் சென்று பல வருடங்கள் இவருடன் தங்கியிருந்தாள். இச்சந்நியாசினியிடமிருந்துதான் இவர் யோகப்பயிற்சிகளையும், இந்தியாவில் உள்ள பல்வேறு

மதங்களையும், அவைகளின் கொள்கைகளையும் அறிந்தார். இதற்குப் பிறகு சந்நியாசி ஒருவர் வந்து வேதங்களின் தத்துவத்தைப் போதித்துச் சென்றார்.

இவருடைய மனம் உலக விஷயங்களில் ஈடுபடாததைக் கண்ட இவருடைய உறவினர்கள், இவரை லௌகீக விஷயங்களில் கலக்கச் செய்ய ஒரு சிறு பெண்ணை இவருக்கு மணம் முடித்து வைத்தனர். இது, மேற்கூறப்பட்டுள்ள விஷயங்களுக்கு முன்னால் நிகழ்ந்தது. ஆனால் இராமகிருஷ்ணரோ மணம் ஆனவுடன் மறுபடியும் காட்டிற்குச் சென்று தியானத்தில் ஆழ்ந்தார். இவருடைய மனஉறுதியைக் கண்ட உற்றாரும் மற்றோரும் திகைத்தார்கள். இவருடைய மனைவியார் பெரியவரானவுடன் (அதாவது உலக விஷயங்களை அறியக் கூடிய வயது அடைந்தவுடன்) தன் கணவனைப் பற்றிப் பலர் பலவிதமாகப் பேசக்கண்டு உண்மையை அறிய விரும்பிக் கால்நடையாகவே தக்ஷிணேஸ்வரம் வந்து சேர்ந்தார். தன் மனைவியைக்கண்ட இராமகிருஷ்ணர் 'தான் எப்பெண்ணையும் தாயாகவே பாவிப்பதாயும், தன் மனம் உலக விஷயங்களில் செல்லாதென்றும், தன்னால் அவளுக்கு ஏதாவது உதவி வேண்டுமாயின் தான் செய்வதாயும்' தெரிவித்தார். பெருந்தன்மையுள்ள அப்பெண்மணி தன் கணவரின் குலையாத தெய்வ பக்தியையும் மன உறுதியையும் கண்டு தான் அவருக்குத் தன்னாலான பணிவிடைகள் செய்துகொண்டும் கற்றறிவதற்குமே வந்திருப்பதாகக் கூறவே இவரும் அதற்குச் சம்மதித்தார். அன்று முதற்கொண்டு இவருக்குத் தொண்டு செய்துகொண்டு பிற்காலத்தில் இவருடைய பிரதம சிஷ்யையாகத் திகழ்ந்தார்.

உலகத்திலுள்ள பல மதங்களைப் பற்றி அறிய ஆவகைகொண்டவராய் இராமகிருஷ்ணர் மற்ற மதாச்சாரியார்களை அடைந்து அவரவர்களுடைய மதங்களைப்பற்றி அறிந்தார். அவைகள் பல கொள்கைகளைக் கொண்டிருப்பினும் ஆதியும் அந்தமும் ஒன்றே என்று அறிந்தார். 'கடவுள் ஒருவரே,' 'கடவுளை உய்தலே மனிதன் கடமை' என்ற இவைகளையே எல்லாமதங்களும் முக்கிய இலக்காகக் கொண்டிருந்தன.

தான் அறிந்த உண்மைகளை உலகின் பாற் பரப்ப முற்பட்டார். கல்கத்தாவிற் கடுத்துள்ள ஒருஇடத்தில் வசிக்கலானார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் இவரை தரிசிக்கவும், இவருடைய போதனைகளைக் கேட்கவும் வரலாயினர். கடவுளை அடைதலையே எல்லோரும் முக்கிய நோக்காகக் கொள்ளல் வேண்டும், அப்படிச் செய்வதற்கு முதலில் மனிதன் தன்னையே சரிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும், என்பன போன்ற பல உண்மைகளைத் தன்னைத் தேடி வந்தவர்களுக்குப் போதித்தார்.

ஞானகுரு இராமகிருஷ்ணர் மனித வர்க்கத்தின்மீது தன் அன்பனைத்தையும் வருவித்தார். தன்னாலியன்ற உதவிகளைச் செய்தார். மாதக்கணக்காயும், நாட்கணக்காயும், மணிக்கணக்காயும் தன்னை அண்டிவந்த ஜனங்களுக்குப் போதிப்பார். இப்படிச் செய்வதனால் இவருடைய உடல் நிலை பலம் குறைய ஆரம்பித்தது. தான் கஷ்டப்படுவதையும் பொருட் படுத்தாமல் எல்லாவற்றையும் செய்து வந்தார். 1886ம் ஆண்டில் ஒருநாள் தன் சிஷ்யர்களை தன் அண்டையில் அழைத்து வேத மந்திரங்களை உச்சரிக்கச் சொன்னார். தன் பூதவுடலைக் கீழே கிடத்தி தானும் வேத மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு இவ்வுலகினின்றும் பிரிந்தார்.

இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் கொள்கைகள் உலகமெங்கும் பரவியது. அதற்குக்காரண பூதர்களாய் விளங்கினவர்கள் இவருடைய சிஷ்யர்களே. அவர்களில் முதன்மைஸ்தானம் பெற்றவர்கள் விஜயகிருஷ்ணகோஸ்வாமி, ஸ்வாமி விவேகாநந்தர், கேஷப்சந்திரஸென், மிஸ் மார்கரெட்நோபிள், மற்றும் பிரபல பிரம்ம ஸமாஜத்தினர்கள்.

அண்டப்புளுகு அண்ணாசாமி

ஸ்ரீமான் ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.

ஒரு கிராமத்தில் இரண்டு கிருஹஸ்தர்கள் இருந்தார்கள். அவர்களில்ஒருவர் ராமேச்வர யாத்திரை போனார். மற்றொருவர் காசி யாத்திரை போனார். ராமேச்வரம்போனவர் அண்ணாசாமி. காசியாத்திரை போனவர் கோதண்டராமன். இவர்களுக்கு யோக்யதையை அநுசரித்துச் செயர்க்கைப்பெயர் வழங்கிவந்தது. அண்ணாசாமியை 'அண்டப்புளுகு அண்ணாசாமி' என்றும், கோதண்டராமனை 'கோட்டைப்புளுகு கோதண்டராமன்' என்றும் ஊரார் அழைத்தார்கள். ஜகஜ் ஜாலமான வாய்பேச்சுமூலம் அவர்கள் ஜீவனம் நடத்தி வந்தார்கள். அவர்கள் போனவிடங்களிலெல்லாம் வாக்கினால் ஜயம். சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பெய்ததுபோல் அவர்கள் பேசும் பேச்சை யாரும் ரஸிக்காமல் இருக்க முடியாது. ஆனால் அவ்வளவும் வாய்ப் பந்தல். அதுவும் சில சமயம் நிழல் தருமல்லவா?

இவர்கள் யாத்திரை முடிந்து வந்ததும் ஊரில் நடந்த ஒரு விருந்துக்கு அழைக்கப் பட்டிருந்தார்கள். பந்தி போஜனம் நடக்கும்போது ஒரு பிராம்மணர் மோர்க்குழம்பு பிரசம்ஸையில் ஈடுபட்டு வெண்ணைபோல்இருக்கும் கீரைத் தண்டுத்தான்களில் பிரத்யேகமாய் பக்ஷபாதத்தைச் செலுத்தினார். "இவ்விதக் கீரைத்தண்டு இதுவரையில் நான் சாப்பிட்டதேயில்லை" என்றார். அப்போது பலதேசங்களைத் திரிந்துபார்த்து ஆங்காங்கு ருசிகரமான பதார்த்தங்களை புசித்த கோதண்டராமன் இந்தக் கீரைத் தண்டு பிரசம்ஸையில் ஒரு உபாக்கியானத்தை எடுத்துரைக்காமல் இருக்கமுடியவில்லை. "ஐயா, கீரைத்தண்டென்றால் கோதாவரிக்கரையில் பார்க்கவேண்டும். ஒரு தண்டு ஒன்று ஒருபாகம் சுற்றளவுள்ள உயர்ந்த நெட்டிலிங்க மரம் அளவு வளர்கிறது. ஒருதண்டு ஸஹஸ்ர போஜனத்திற்குக் கண்டு மிகுதியாகும். ஆனால், பாருங்கள்; இவ்வளவு பெருத்திருந்தாலும் அடுப்பில் போட்டால் வெண்ணைதான். வாயில் போட்டால் அமிர்தம். அதைச்சாப்பிட்டவர்களுக்கு நம்மபக்கத்து நரம்புக் கீரைத்தண்டெல்லாம் நாக்கில் ஏறாது" என்றார்.

தன் நண்பன் பேசியதும் அண்ணாசாமிக்கு நாக்கு துருதுருவென்று வந்தது. "ராமேச்வர யாத்திரையில் நான் கண்ட அதிசயத்தைக் கேளுங்கள். ராமநாதபுரத்திற்குப்பக்கத்தில் குயவர்களின் பழைய கிராமம் ஒன்று இருக்கிறது. அங்கு தயாராகும் பாஜனங்கள் மலை போல் இருக்கின்றன. ஒரு உச்சிப் பிள்ளையார் கோவில் குன்றுஅளவு மண், ஒரு சட்டிக்குக்காணும். ஒரு சட்டியில் கமலாலய ஜலம் கூடப்பிடிக்கும் போல் இருக்கிறது".

பந்தியில் ஒரு சிறுவன் கேட்டான். "எதற்காக அவ்வளவு பெரிய பானை"? என்று.

அதற்கு சமாராதனை செய்யும் கிருஹஸ்தர் பதில் சொல்லுகிறார் "ஏன், விளங்க வில்லையா? கோட்டைப்புளுகு கோதண்டராமனின் கீரைத் தண்டை வேகவைக்க அண்டப்புளுகு அண்ணாசாமியின் சட்டி தயாராகிறது" என்று.

பந்தியில் போஜனம் செய்பவர்கள் "கொல்" என்று சிரித்தார்கள்.

"புது வைஸ்ராய் தேவை"

இந்திய வைஸ்ராய் பதவி இப்பொழுது ஏலத்திலிருக்கிறது. ஆனால் அதை எவரும் முகர்ந்துகூடப் பார்க்கப் பின் வாங்குகிறார்கள். அதனால் 'சாம்ராஜ்ய சாசுவதச்சட்டப்' மூலம் அபேட்சகர்களைப் பலவந்தமாகக்கூட்டி ஆலோசனை நடக்கிறது. முதல் மந்திரி சர்ச்சில், துன் மந்திரி அமெரி, இவர்களிருவரும் அவரவர்கள் ஆசனத்தை அலங்கரித்திருக்கின்றனர். அவர்கள் முன்பு வீற்றிருப்பவர்கள் விளக்கெண்ணை குடித்தாற் போல வேதனைப் படுகிறார்கள். ஒவ்வொருவரும் மற்றவர் வெற்றி பெறுமாறு ஆசிகூறிக்கொள்கிறார்கள். சர்ச்சில் பேச ஆரம்பிக்கிறார்.

சர்ச்சில்: நண்பரே! நிமிர்ந்துஉட்காரும். நீர் ஒரு பிரிட்டிஷ்காரர் என்பதை மறக்க வேண்டாம். விஷயத்தை ஊன்றிக்கவனிக்கவும். 40 கோடி கருப்பர்களை ஆளும் ஒரு மகத்தான 'சான்ஸ்' உம்முடைய தயவுக்குக் காத்துக் கொண்டிருக்கிறது. உலக சாம்ராஜ்யங்களிலெல்லாம் மிகப்பெரிதான நம் சாம்ராஜ்யத்திலேயே அதிகச்சம்பளம் உம்முடையதுதான். சிறிது தைரியம், படாடோபம், சிறை நிர்வாகஅறிவு, மிரட்டலுக்கு பணியாமை முதலிய சில குணுதிசயங்கள் தான் நீர் கொள்ள வேண்டியன. என்ன, ஸர் லிங்க்ளேர்! நீர் என்ன சொல்கிறீர்?

லிங்க்ளேர்: நானு.... வைஸ்ராயா?.... நான்....வந்து ஒரு மிதவாதியாச்சே.... இந்தியாவைக் கட்டியாள ஒரு மிதவாதியை அனுப்புவது உமக்குத்தான் அழகோ? உமக்குச் சம்மதமிருந்தாலும் அது மிதவாத தர்மத்திற்கு ஒவ்வாதே.... எனக்கு என்னமோ சிறிது சந்தேகந்தான்.... அதுவுந் தவிர எனக்குச் சில நாட்களாக உடம்பு சௌகர்யமாயில்லை. தயவு செய்து ஏழையை மன்னிக்கவும்.

சர்ச்சில்: என்ன மிஸ்டர் அட்லி!

அட்லி: என் நிர்வாகத் திறமையை நீங்கள் அறிந்து கொண்டது பற்றி எனக்கு மெத்த சந்தோஷம். ஆனால் இந்தியாவில் ஒற்றுமையே யில்லை என்று சொல்லுகிறீரே? அங்கே ஒற்றுமையைச் சிருஷ்டிப்பது என்னால் சாத்தியமான காரியமா?

சர்ச்சில்: அதையெல்லாம் நீர் தான் பார்த்துக்கொள்ள........

அட்லி: அவர்கள் ஒன்று சேர்ந்துவிட்டால்?

சர்ச்சில்: அப்படியானாலும் பரவாயில்லை. அங்கு ஒற்றுமையே யில்லையே என்று நீர் விடாமல் சொல்லிக் கொண்டிருந்தால் போதும். அதுவும் பலிக்காவிட்டால், நீர்தான் அவர்களிடையே வேற்றுமையைக் கிளப்பி....சட், உம்மால் முடியாது. மிஸ்டர் மாரிஸன்! நீர் என்ன சொல்கிறீர்?

மாரிஸன்: ஆனால் இந்தியா ஒரு பெருங் கண்டமல்லவா? லண்டன் நகரசபையல்லவே. அவர்களை யெல்லாம் என்னால் பேய்த்துக்கட்ட முடியும் என்று நினைக்கிறீர்?

சர்ச்சில்: நீர் ஒரு விஷயத்தை மறந்துவிட்டீர். அவர்களெல்லோரும் 40கோடி **இந்தியர்**தானே, ஆங்லேயர் அல்லவே? (அமெரியைப்பார்த்து) நான் முன்பே கூறவில்லையா? இந்த சேஷ்டைக்கள் இதெற்கெல்லாம் ஒன்றும் பிரயோசனமில்லை யென்று.

அமெரி: நமது கிரிப்ஸ் இல்லையா?

கிரிப்ஸ்: நான் செய்த சேவைக்கு இதுவா பிரதிபலன்? உங்களுக்கு நான் இந்தியாவைக் காப்பாற்றிக் கொடுக்க வில்லையா? இந்தியா செல்வதிலிருந்து என்னைக்காப்பாற்ற மாட்டீர்களா?

கலாச்சர்: மாஸ்கோவைக் கலந்து கொள்ள எனக்கு அவகாசம் வேண்டும். ஆனால் இந்தியாவில் லட்சக்கணக்கான தோழர்கள் இருக்கிறார்கள் என்னை ஆதரிக்க.

சர்ச்சில்: ஓய், உம்மையாரையா இங்கு கூப்பிட்டது? இந்தியாவை ஆள ஒரு கம்யூனிஸ்டா? வெளியே போகிறீரா— இல்லையா?

பர்னட்ஷா: என்ன சொல்கிறீர்கள்? இந்திய வைஸ்ராய் பதவியா? சட்........ ஒரு பெரிய நாட்டில் ஜெயில் காவலனை இருப்பதைவிட..... அதுவும் வெஸ்ட மினிஸ்டரிலுள்ள 600 முட்டாள்கள் உத்தரவுக்குக் கீழ்ப்பட்டா? (அவசரமாக வெளியேறுகிறார்.)

லார்டு கிரான்போன்: ஸார், வந்தனம், உங்களுக்குத்திருப்தியானல் நான் ஒன்று சொல்லுவேன். பூகோள ரீதியில் இந்தியா ஒரேநாடு. (கூறுபோட முடியாதது) என்பதில் எனக்குப் பரிபூரண நம்பிக்கையுண்டு.

சர்ச்சில்: பலேபேஷ்!

கிரான்போன்: ஆனல் என் கண்ணீர் ஊற்றுகள் வற்றி வருகின்றன. மைனரிட்டி பிரச்னை பற்றி முதலைக்கண்ணீர் விடுவது சுலபமாயிராதே!

சர்ச்சில்: அப்படியா.... ஆனல் பிரயோசனமில்லை. என்ன சொல்கிறீர், அமெரி?

அமெரி: இதோ இருக்கிறார் பொய்புரட்டுப்பிரபு. யு. கே. ஸி. ஸியின் தலைவராக. இவரது அநுபவம் நமது வேலைக்கு உபயோகமாயிருக்கும்.

பொய்புரட்டுப்பிரபு: நீங்கள்தரக்கூடிய சம்பளம்?

சர்ச்சில்: மாசம் ரூபா 26,600 சம்பளம். அதைத்தவிர பல்வேறு அலவன்ஸ், படிப்பணம்.

பொய்புரட்டுப்பிரபு: என்னை மன்னியுங்கள். அந்தச்சம்பளம் போதாது. தவிர வேறு சொந்த வகையிலும் பணம் திரட்டமுடியாது போலிருக்கிறது.

ஆண்டர்ஸன்: நல்ல 'சான்ஸ்' தான் ஆனல் நான் சமீபத்தில்தான் விவாஹம் செய்துகொண்டேன்.

சர்ச்சில்: உமக்கு இந்தியாவில் நல்ல அநுபவம் உண்டே! ஆனல் அதுவும் உமக்கு விரோதமாகத்தான் முடியும். யானைக்கும் இந்திய பிரபுவுக்கும் ஞாபக சக்தி அதிகமாமே?

லாயிட் ஜார்ஜ்: (அறைக்குள் நுழைந்துகொண்டே) ஓ! உங்களுக்கு ஒரு வைஸ்ராய்தானே தேவை? என் மோட்டார் டிரைவர் வெளியேதான் இருக்கிறான். சவாரி, சாப்பாடு, தூக்கம், விஸ்தரிப்பு,....... இவையெல்லாம் அவனுக்குத்தெரியும். உங்கள் யோசனையை வேண்டுமானல் அவனிடம் கூறி அவனுக்கு இஷ்டமா என்று கேட்டுச்சொல்லுகிறேன்.

அமெரி: ஏன், என்பிள்ளை ஜான் இருக்கிறான். அவன் ஹிட்லரின் சுயசரிதத்தைத் தலைகீழாக வாசித்திருக்கிறான். பல பிரபலஸ்தரிடம் கற்றறிந்தவன்.

சர்ச்சில்: அப்படியானல் என் மகனுக்குத்தான் என்ன? இல்லை, என் மாப்பிள்ளை, வேறுபல உறவினர்களும் இருக்கிறார்கள்.

சர்ச்சில் மகள்: அப்பா! நமது பரம்பரை சாம்ராஜ்யத்தை இழக்கவா நான் எனது தாய் வயிற்றில் பிறந்தேன்?

மாக்ஸ்வெல்: நான் ஏற்றுக் கொள்ளத் தயார்.... ஆனல் ஹிம்ளர், நாஜிப்படை முதலிய மெய்காப்பாளரைத் தருவதாக இருந்தால்தான். (சர்ச்சில் கடைசியில்

லார்டு சின்லெட்கோ பக்கம் திரும்புகிறார்.)

சின்லெட்கோ: எனக்கு மீண்டும் பதவி நீடிப்பா? ஐயோ, கடவுளே! (மாக்ஸ்வெல் பக்கம் திரும்பி) என்னிடம் ஒரு நீளக் கயிற்றைத்தாரும். நான் போய்.... (உயிருக்கு ஓட்டம் பிடிக்கிறார்).

சர்ச்சில்: (காண்டர்பரி பெரிய பாதிரியைப் பார்த்து) ஒரு வைஸ்ராயைக் கண்டுபிடித்து மோக்ஷ சாம்ராஜ்யத்தையடைய நாம் என்ன செய்யலாம்?

பெரிய பாதிரி: நாம் பிறரிடமிருந்து ஆக்ரமித்துக் கொண்டதையெல்லாம் திருப்பி அவரிடமே கொடுத்துவிடுவோமே!

சர்ச்சில்: (தனக்குள்ளே) என்னவெட்கக்கேடு இது! கடவுள் கொடுத்த சாம்ராஜ்யத்தை ஆளக்கடவுளுக்குஆப்தரான ஆங்கிலேயருக்குத் திறமையில்லையே!

குறிப்பு:– துரதிருஷ்ட வசமாக மேற்கண்டவருள் எவரும் வைசிராயாகவந்துவிட்டால், அவர்கள் விரும்பினால் மன்னிப்பும், கோரினால் ஆசிச்செய்தியும் காலாகாலத்தில் அநுதாபச் செய்தியும் அனுப்பத்தயார்.

—"ஸோஷல் வெல்பேர்"

மதிப்புரை

நினைவு மஞ்சரி [இரண்டாம்பாகம்]

ஆசிரியர்: மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள், பதிப்பாளர்: எஸ். கலியாணசுந்தர அய்யர், திருவட்டீசுவரன்பேட்டை, சென்னை.

விலை ரூபா. 1—4—0

டாக்டர் அய்யரவர்கள் பல பத்திரிகைகளில் எழுதியனவும், செய்த பிரசங்கங்களும் ஆக இருபத்தைந்து இனிய கட்டுரைகள். நல்ல காகிதத்தில் 224 பக்கங்கள் கொண்ட புத்தகவடிவில் வெளிவந்துள்ளது.

குண்டல கேசி அகவல்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பாடியது. வெளியீடு: அன்பு நிலையம், இராமச்சந்திரபுரம், திருச்சினாப்பள்ளி.

விலை ரூபா. 0–4–0

ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் தமிழ்ப்பணி உலகறிந்தது. அம்முறையில் ஐம்பெருங் காப்பியங்களில் சிறந்த 'குண்டல கேசி'யை அகவலாக-மிக எளிதமாகவும் சுவைததும்பவும்–பாடியிருப்பது மிகப் போற்றத்தக்கது.

சதாசிவ ப்ரும்மம்

ஆசிரியர்: யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், வெளியீடு: அன்பு நிலையம்.

தனிப்பிரதி விலை அணா 2. பத்துபிரதி விலை ரூ. 1

புத்தகம், தோற்றத்தில் மிகச்சிறிது; விஷயத்தில் பெரிது. தமிழ் நாட்டில் திருவிசைநல்லூரில் பிறந்து, மௌனியாகவும் பரம ஞானியாகவும் இருந்து, பலதெய்வீகச்செயல்களைப் புரிந்து, நெரூர் என்னும் புண்ணிய ஸ்தலத்தில் சித்தியடைந்த சதாசிவ ப்ரும்மத்தின் வரலாறு சுருக்கமாக இனிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

பிரும்மஞான கீதங்கள்

ஸ்ரீ எஸ். நாராயண அய்யர் இயற்றியது. ராகம், ஸ்வரம் அமைத்தது: சிந்தாமணி ஆர். சுப்பராமன். வெளியிட்டது: ஸ்ரீ டி. எஸ். ராமாநுஜம் எம். ஏ., எல். எல். பி., (லண்டன்) அச்சானது: பாரதிவிஜயம் பிரஸ், தியாகராயநகர்.

விலை ரூபா. 0–8–0

'பெரியார்' : குணாதிசயங்கள்

'கார்டிநல் நியூமன்' என்னும்புலவர் வாய்மொழி

வே. க. ராமநாதன் பி.ஏ.,பி.எல், 'மாதவி கங்கணர்' ஆசிரியன்

'பெரியார்' தம்முடன் ஒத்துழைக்கும் நண்பர்களின் மனம் புண்படவோ வருந்தவோ ஒரு சொல்லும் சொல்லார்; அவர்களுடன் கருத்து முரண்பாடோ மனத் தாங்கலோ வைத்துக் கொள்ளார்; அவர்களையடக்கியாளவோ அல்லது ஐயமுறச் செய்யவோ அல்லது அவர்கள் மனம் புழுங்கும்படியோ அவர்கள் சினங் கொள்ளவோ நடந்து கொள்ள மாட்டார். சபையோர் அனைவரையும் கூர்ந்துகவனித்தே அவரவர்களுக்கேற்ப நடந்து கொள்வார். கூச்சம், அச்சம் உடையோர்களிடம் பரிவுடன்பேசுவார், சற்றே அகல நிற்பாரை அன்புடன் அழைத்து அணைத்துப்பேசுவார். பேதைகளைக்கண்டு மனமிரங்கி ஆதரவுடன் உரையாடுவார். தம்முடன் பேசிக்கொண்டிருப்பவரை மறந்து ஒரு மொழியும் உரையார். அஸந்தர்ப்பமான விஷயங்களைக் குறிப்பாலுமுணர்த்தார். அல்லது மனச்சங்கடம் விளைவிக்கக்கூடிய வெடிப்பான உரை யொன்றும் மொழியார். பேசுங்கால் பிறரைக்குறுக்கிட்டுத் தாமே முற்படப் பேசிநில்லார். கேட்போர் நச்சுபடப் பேசிக் கொண்டும் நில்லார். அன்புப் பணிகளை அயலுணரச் செய்யார். செய்யுங்கால் அன்பெனும் கொடையை அளிப்பவர் போலன்றி அன்பைப் பெறுபவர்போலவே ஒழுகுவார். தள்ளொணாதுவற்புறுத்துஞ்சமயங்களிலன்றித் தற்புகழ் உரையார். எட்டிக்குப் போட்டியென எதிர்மொழி உதறார். சூளுங்கோளும் அவர் செவி நுழையா. தம்மை எதிர்ப்பாரையும் நல்லெண்ணம்படக் கருதுவாரே தவிர்த்துத் தூற்றியொரு சொல் சொல்லார். விவாதங்கள் வியவஹாரங்களில் அற்பமாய்க் குறுநோக்கத்துடன் நடந்து கொள்ளமாட்டார். எதிர்த்தார் மீது அதரும வெற்றி கொள்ளார்; அவரைக் குறைகூறிச் சிறுமை செய்து புண்பட உரைத்து அடக்கிவிட மனமொவ்வார். பறையறையாய்ச் சொல்லவொண்ணாத ஒரு கற்பனையையுங் கூறத்துணியார். வருங்காலம் ஆய்ந்துபேசும் விருத்தரைப் போல் பகைவரையும் ஒரு கால நண்பரெனவே கருதி நடப்பார்.

அவதூறுபல கேட்டு மனம் மாறார். நன்றல்லனவற்றைக் கருத்தில் கொள்ளார். நன்றல்லன செய்யவும் அவருக்கு ஆற்றலோ அமயமோ கிடையாது. ஆழ்ந்தமர்ந்து பொறையும் கருணையும் பொருந்தி, சகலமும் பொறுத்து நிற்பார். தடுக்கவொண்ணாத் துன்பத்தை அநுபவித்து ஒழிப்பார். உற்றார் உறவினர் மரணத்தால் பிரியுங்கால் அம்முடிவை மாற்றவியலாத காரணத்தால் அதைப் பொறுத்து நிற்பார். விதியை விலக்க முடியாதாகையால் தலைவணங்கிநிற்பார்.

எதாவது வாதங்களில் தலையிட்டால் தப்பைவிட மேதாவிகளாயினும் கற்றடங்கிய மனதும் குணமுமில்லாதவர்கள் போல் அவர் பிறர்பால் ஒழுக்கமிழந்து மரியாதைக் குறைவாக நடந்துகொள்ள மாட்டார்.

அவர் கொள்கைகள் சரியானதாகவுமிருக்கலாம்; அன்றி, தவறான கொள்கைகளாகவுமிருக்கலாம். ஆனால் அவர் அதி தெளிவான புத்தியானாதலால் நியாயந் தவறார். நிதானமாகச் சொன்னாலும் ஆணித்தரமாய்ச் சொல்வார். அவருடைய திடதீர சித்தத்துக்கிணங்க அவர் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் ஆற்றலுடையார்.

அரிசி, மாவு இயந்திர பகிஷ்காரம்

கண்ணன்

இயந்திரங்களின் பகிஷ்காரம் என்ற உடனே நமக்கு ஆச்சரியம் உண்டாகலாம். ஒரு அரசாங்கமே அதற்கு ஓர் சட்டத்தை ஏற்படுத்தினாலோ....? திருவாங்கூர் ஸமஸ்தானம் முதலில் ஷெடி இயந்திரங்களின் பகிஷ்காரத்திற்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஏன், இந்தியா பூராவும் மற்ற அரசாங்கங்களும் அவ்விதம் செய்யலாகாது?

நாம் ஏன் அங்ஙனம் செய்ய வேண்டும்? இப்பொழுது நம் நாட்டில் ஆகாரப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. நமது நாட்டில் உற்பத்தியாகும் அளவில் சராசரி நூற்றுக்கு ஐந்து விகிதம் இதர நாடுகளிலிருந்து இறக்குமதியாகி வந்தது அறவே நின்றுவிட்டது.

இந்தியத் தேவைக்கு வருஷம் ஒன்றிற்கு **மூன்று கோடி** டன்கள் அரிசி அவச்யம். அதில் சுமார் **15 லக்ஷம்** டன்கள் இறக்குமதியாகவேண்டியிருக்கிறது. அந்த அள்வு நின்றுவிட்டதென்றால் பஞ்சமில்லாமல் எவ்விதம் இருக்கக்கூடும்?

அதைத்தடுக்க வழியுண்டா? ஆம் உண்டு. நாம் யந்திரத்திலிட்டு நன்றாகத் தீட்டி தூய் வெண்மையாக எடுக்கும் அரிசியைவிட கைக்குத்தல் அரிசியை உபயோகிப்பதாலேயே. இந்தியாவில் விளையும் நெல் பூராவும் கைக்குத்தல் அரிசியாக மாறினால் இப்பொழுது ஏற்பட்டுள்ள 5% குறைவை நிவர்த்திக்கலாம். அக் கைக்குத்தல் அரிசி நூற்றுக்கு 10 விதம் யந்திரத்திலரைப்பதைவிட நம் தேவைக்குக்கண்டு அதிகம் காண்கிறது. இவ்விதம் உபயோகிப்பதால் 5% மிகுதியாகிறது. இதரநாடுகளிலிருந்து இறக்குமதியும் வேண்டுவதில்லை. இதால் இயந்திர அரைவையில் நஷ்டம் இரண்டுமடங்காகிறது.

தவிர முக்கிய சத்துள்ள பாகமாகக் கருதப்படும் அரிசியின்மேற்பாகம் இயந்திரத்தில் தீட்டுவதால் (குத்துவதால்) போய்விடுகிறது. ஆனால் கைக்குத்தல் அரிசி முனை மழுங்காமலும் மேல்பாகம் கெடாமலும், அதிலுள்ள தவிடு அதிகம் குறையாமலும் இருப்பதால் சத்து அதிகமுள்ளது என்பது உண்மையே.

மேலும் பலர் சேர்ந்து செய்யும் வேலையை யந்திரம் வெகுசீக்கிரம் செய்துவிடுகிறதல்லவா. நாடுபூராவும் கைக்குத்தல் அரிசியையே உபயோகிப்பதாயிருந்தால் பலர் அந்தவேலைக்குவேண்டியிருக்கும். அதனால் வேலையில்லாத்திண்டாட்டம் ஓரளவு குறையும். ஏழை மக்கள் அனேகர் பிழைப்பார்கள்.

ராஜதானிகளில் கைக்குத்தலரிசியை உபயோகிக்கும் ஜனங்களின் ஸங்கியை:

ராஜதானிகள்.	கைக்குத்தலரிசியை உண்ணும் ஜனங்களின் ஸங்கியை சதமானத்தில்.
பிஹார்	90
அஸ்ஸாம்	85
யு. பி.	85
ஒரிஸ்ஸா	80
வங்காளம்	75
ஹைதராபாத்	70
திருவாங்கூர்	45
மதராஸ்	30
பர்மா	20

இவ்வித சௌகரியங்கள் பல இருப்பதின் காரணமாக நாம் ஏன் கைக்குத்தல் அரிசியை உபயோகித்தல்கூடாது?

அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கம் சுல்பமான முறையில் நெல் குத்த ஓர் சிறிய மர எந்திரம் தயாரித்துள்ளனர். அதன் பெயர் 'மகன் வாடி நெல்லரைவைசக்கை' என்பதாகும். இம்மாதிரி அனேக இடங்களில் விற்பனை செய்து வருகிறார்கள். விலையும் மிகச் சொற்பமே. அதன் மூலம் ஓர் ஸ்திரீ நாள் ஒன்றுக்கு ஒரு மூட்டை அரைக்கக்கூடும். ஆகையால் இத்தேசத்தினர் யாவரும் தங்கள் குடும்பத்தில் அவ்வித எந்திரத்தை வைத்துக்கொண்டு இயந்திரத்தை பகிஷ்கரித்தல் வேண்டும்.